பதிவு எண் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை { உள்நாடு 1 அணா, வெளிநாடு 1½ அணா

குடி அரசு

வருட சந்தா முன் பணம் ...	ரூ 3—0
6 மாத சந்தா ,, ...	ரூ 1—12
வெளிநாட்டிற்கு ,, ...	ரூ 4—0

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு, விபவ ஆனி மீ 25௳ (8—7—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 11.

அறிக்கை.

நமது
கோயமுத்தூர் ஜில்லா
வாசிகளின் சௌகர்யத்தை உத்தேசித்து

ரஸ்டன்—ஹார்ன்ஸ்பி

ஆயில் இன்ஜின்கள், பம்புகள், பெல்டிங்கள்,
பாப்கோ பெய்ண்ட்டுகள், இன்ஜினீர்கள் சாமான்கள்,
பைப், பைப்பிட்டிங்கள்,
ஏராளமாய் வைத்திருக்கிறோம்.

MASSEY & Co LTD
ENGINEERS

மாசி அண்ட் கம்பெனி, Ltd,
திருச்சி ரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட்டு,
கோயமுத்தூர்.

டிடக்டாஸ்
அல்லது
துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன் மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாய்க் கண்டு கொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின் தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக் கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால் தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் டி. கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாட்டோருக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில அனுப்பமுடியாது.

... எம்போரியம் ஜி. டி. மதராஸ்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாய்க் கூடி விடுவார்கள்.



... ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும், குறைந்த விலை 4—8—0 தபால் செலவு 0—6—0.

தீ. பான்ஸி வாட்ச அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்

ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணாமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைன்ஸ் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.

குடும்பத்துக்கோர் பொக்கிஷம்.

சில மாதங்களுக்குள்

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்"

11,000 பிரதிகள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒருவர் வாங்கிப் படித்தால் அவர் தம் நண்பர்கள் எல்லோரையும் வாங்கும்படி தூண்டுகிறார். எனவே இப்புத்தகத்திற்கு உள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம்.

இல்வாழ்வை நல்வாழ்வாக

நடத்த உத்தேசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் கையில் இந்நூலின் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும்.

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

மூன்றாம் பதிப்பு விலை ரூ. 2.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். போலி புஸ்தகங்களை வாங்கி ஏமாறுதீர்கள். புஸ்தகத்தின் பேரில் "வாஸன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கின்றதாவென்று பார்த்து வாங்குங்கள். எமது விலாசம்:—

வாஸன் புஸ்தகசாலை,

244 தங்கசாலை வீதி, தபாற் பெட்டி 119, மதராஸ்.

13-ம் வருடம் பிறந்துவிட்டது! 13-ம் வருடம் பிறந்துவிட்டது!

"ஆனந்தபோதினி"

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.

48 பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது

தமிழ்நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.

13 வருடங்களாக நடைபெற்று வருவது.

20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத் தக்கது.

இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ 1.

பினாங், சிங்கப்பூர், கொட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1-4.

மாதிரி காப்பி இனாம். விலாசம்:— 'ஆனந்தபோதினி' ஆபீஸ்,

நெ. 6. வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

போட்டோ ஆல்பம்.



நேயர்களே! இந்த ஆல்பத்தில் பலவிதமான விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படங்களைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாநகரின் [illegible] ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் [illegible] கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

கி. கிருஷ்ண ஏஜன்ட், பாக்ஸ் பெட்டி 119 மதராஸ.

கடவுளை வணங்க

பார்ப்பனத்தரகர் வேண்டுமோ!

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு பண்ணும் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள், தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் $4\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பினால் எந்த தேசத்துக்கும் [illegible] அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,

97, [illegible] தெரு, மதராஸ்.

அனாதி ஜோதிடம்

[illegible] ஜாதகப்படி [illegible] பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்களை நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக [illegible] பற்றி [illegible] எழுதி அனுப்பப்படும். [illegible] பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னதென்று [illegible] தெரிவிக்கலாம். [illegible] ஜோதிட நூல்கள் [illegible] எழுதி அனுப்பும் பலன்கள் பொருத்தமாயும் [illegible] விவரமாகவும் சாஸ்திரீய [illegible] ஜாதக [illegible] கடிதம் எழுதுவதற்கு [illegible] தெரிவியுங்கள்.

கே. ஆறுமுகம் செட்டி,

[illegible]

பார்ப்பனரல்லாதவர்களுக்கு

சடங்குகளுண்டா?

[திரு. எ. மாணிக்கம் பிள்ளை எழுதுகிறார்.]

வருணாச்சிரம தருமங்களைப் பற்றி பார்ப்பனர்கள் எழுதி வைத்திருக்கும் நூல்களில் முதன்மையாயுள்ளது மனு தர்ம சாஸ்திரம். இப்போதுள்ள பார்ப்பனரல்லாதாரையும் நான்காம் வருணத்தார்களாகிய சூத்திரர்களென்று பார்ப்பனர்கள் சொல்லுகிறார்கள். மேற்கண்ட மனுதர்ம சாஸ்திரத்தில் சூத்திரர்களென்ற சாதியாருக்கு எவ்வித சுப சடங்குகளும் பிதுர் சடங்குகளும் கிடையாதென்று எழுதப்பட்டிருக்கிறதே தவிர சடங்குகள் செய்ய வேண்டுமென்று ஒரு வரி கூட எழுதப்படவில்லை. அவ்விதமிருக்க அயோக்கியர்களான புரோகிதப் பார்ப்பனர்களும் அவர்களோடு கூட வந்து கொள்ளையடிக்கும் பிச்சை வாங்கும் பார்ப்பனர்களும், நம்மவர்களுக்கு விவாகம், கர்ப்பதானம், சீமந்தம், விதை தானம், புண்ணியாகவசனம், அன்னப்பிராசனம், கர்ணபூஷணம், வித்தியாப்யாசம் முதலான சுப சடங்குகளும், இறக்கும் தருவாயில் செய்த பாவங்களையெல்லாம் போக்க சர்வப்பிராயச்சித்தம், இறந்த பின் அந்த்யேஷ்டி கிரியை, தகன கிரியை, கருமாதி, மாதமாசியம், ஊனமாசியம், வருஷாப்தீகம், அமாவாசை தர்ப்பணம், மாதப்பிறப்பு தர்ப்பணம், உத்திராயண தட்சணாயன புண்ணியகால தர்ப்பணம், கிரகண தர்ப்பணம், வருஷ சிரார்த்தம், மாளய பட்ச சிரார்த்தம் முதலான பல பிதுர் சடங்குகளும் உண்டென்று அவர்கள் சாத்திரத்துக்கு விரோதமாய் பொய்சொல்லி நம்மவர்களை ஏமாற்றி ஒரு குடும்பத்துக்கு வேண்டிய அரிசி, பருப்பு, உளுந்து முதலான சகல தான்யங்களும், உப்பு, புளி, மிளகு, சீரகம் முதலானசகலசாமான்களும், எண்ணெய், நெய், பால், தயிர் முதலானவைகளும் எண்ணிறந்த காய்கறி வகைகளும், பழவர்க்கங்களும் கொள்ளை கொண்டு போவதோடு திரவியம், வஸ்திரம், குடை, பாதரட்சை, பாத்திரம்முதலானவைகளையும் தானம் வாங்கிப்போகிறார்கள். இன்னும் செல்வந்தர்களிடம் நிலையான ஜீவனத்துக்கு உபயோகமான பூமி, வீடு, பசு, ரிஷபம் முதலானவைகளையும் தானம் வாங்கிப் போகின்றார்கள்.

இம்மட்டோ? விரதங்களினால் மோட்சம், சுவர்க்கம், புத்திரோற்பத்தி ஆயுள் விர்த்தி, தன தான்ய விருத்தி முதலானவைகளும், மறு ஜன்மத்தில் அளவில்லாத ஐஸ்வர்யமும் உண்டாகுமென்று கற்பித்து பலவகை தானங்களும். திரவியங்களும் கொள்ளைகொண்டு போகிறார்கள். இவ்வயோக்கிய பார்ப்பனர்களால் அவர்களின் வயிற்றுப்பிழைப்புக்காக எழுதி வைக்கப்பட்டிருக்கும் பொய்யும் புரட்டும் நிறைந்துள்ள மனுதர்ம சாத்திரத்தில் துவிஜ ஜாதி அல்லாதவர்களுக்கு சடங்குகளுண்டென்று ஒரு இடத்திலாவது ஒரு வரியாவது எழுதி வைக்கப்பட்டிருக்கிறதா வென்பதை நாம் பார்க்காமல் ஏமாந்து மோசம் போய் சோம்பேறி பார்ப்பனர்களுக்கு நாம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பொருள்களை வருஷத்துக்குப் பலமுறை அள்ளிக் கொடுத்து விட்டு நாம் தரித்திரர்களாகி வருகிறோம். பிச்சைக்காரப் பார்ப்பனர்கள் மேற்கண்ட பலவித தானங்களைக் கொள்ளை கொண்டு பணக்காரர்களாகி சகல போகங்களையும் அநுபவித்து வருகிறார்கள்.

மனு நூலில் சூத்திரர்களுக்கு முப்பது நாள் தீட்டு உண்டென்றும், அந்தத் தீட்டும் மூங்கில் தடியைத் தொடுவதினால் போய் விடுமென்றும் எழுதி வைத்திருக்க பதினாறு நாள் தான் தீட்டு என்று தீட்டுப் போக புண்ணியாவசனம் கிரக எக்கியம் முதலானவைகள் செய்யச் சொல்லி பணம் பறிக்கிறார்கள். இவர்கள் இப்படிச்செய்ததற்குக் காரணம் நம்மவர்களெல்லோரையும் துவிஜ ஜாதியில் சேர்ந்த க்ஷத்திரியர், வைசியர்களென்று சொல்லுகிறார்களா வென்று கேட்கிறேன். அல்லது நம்மவர்களை சூத்திரர்களென்று சொன்னால் சூத்திரர்களுக்குச் சாத்திரத்தில் யாதொரு சடங்குகளும் விதிக்கப்படாமலிருக்க சடங்குகளுண்டென்று பொய்சொல்லி நம்மை ஏமாற்றி பணம் பறித்துப் போகவில்லையா வென்று கேட்கிறேன். ஆகையால் பார்ப்பனர்கள் தங்கள் வயிற்றுப்பிழைப்புக்காக பொய் சொல்லி நம்மை ஏமாற்றி பலவகை சடங்குகள் செய்யச் சொல்லி பணம் பறித்துப் போகிறார்களென்பதையுணர்ந்து அநாவசியமான சகல சடங்குகளையும் நிறுத்திவிட வேண்டியது அவசியம். சூத்திர வகுப்பினர்களுக்கு மனு நூலில் யாதொரு சடங்குகளும் விதிக்கப்படவில்லையென்பதை எடுத்துக் காட்ட அம்மனு நூலில் எழுதியுள்ளவற்றில் சிலவற்றை அடியில் குறித்துள்ளேன்.

மனு 2—16, 26, 27 வது சுலோகங்களில் கர்ப்பதானம் முதல் தேக சமஸ்காரம் வரையில் உள்ள சகல கருமங்களும் துவிஜ ஜாதியாரான பிராமணர், க்ஷத்திரியர் வைசியர்களுக்கு மாத்திரம் சொல்லப்பட்டிருக்கின்றனவேயன்றி அக்கருமங்கள் சூத்திரர்களுக்குச் சொல்லப்படவில்லை.

மனு—10-126 சூத்திரனுக்கு உபநயன முதலான சமஸ்காரங்களில்லை.

மனு—10-122 சூத்திரன் சுவர்க்கத்திற்காவது; ஜீவனத்துக்காவது பிராமணனையே தொழ வேண்டும்.

மனு—10-123 பிராமணனை உபசரிப்பதே சூத்திரனுக்கு எல்லாத் தொழிலைவிட மேலான தருமமென்றும், மற்றவைகளெல்லாம் பயனில்லாதவைகளென்றும் கருமகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மனு—5-83 சூத்திரர்கள் முப்பது நாள் தீட்டு இருக்க வேண்டியது.

மனு—5-99 சூத்திரனுக்குத் தீட்டுப் போகும் நாளில் மூங்கில் தடியைத் தொட்டால் தீட்டுப் போய்விடும்.

மேற்கண்ட சுலோகங்களினால் பார்ப்பனர்களால் சூத்திரர்களென்று கூறப்பட்டு வரும் வகுப்பினர்களுக்கு மனு நூலில் யாதொரு சடங்குகளும் விதிக்கப்படவில்லையென்பது நன்கு விளங்குகிறது.

நம்மவர்களில் சிலர் அறியாமையினால் மோசக்கார புரோகிதப் பார்ப்பனர்களின் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டு சகல சடங்குகளும் செய்து பார்ப்பனக் கூட்டத்தாருக்கே தங்களுடைய பொருளைக் கொட்டிக் கொடுத்து வருவதுந் தவிர உண்மையை எடுத்துரைக்கும் "குடி அரசு" "திராவிடன்" முதலான பத்திரிகைகளை நிந்தித்தும் வருகிறார்கள். இவர்கள் மனுதர்ம சாத்திரம் என்னும் நூலை ஒரு தடவை ஆதியோடு அந்தமாக வாசித்துப் பார்த்தால் பார்ப்பனர்கள் வார்த்தையை நம்பி சடங்குகள் செய்து திரவியத்தை வீணாகச் செலவுசெய்யமாட்டார்கள். ஏனென்றால் சாத்திரத்திலே விதித்துள்ளபடி யோக்கியதையுள்ளபிராமணன் இப்பூலோகத்திலேயேகிடைக்க மாட்டான். யோக்கியதையற்ற பிராமணனுக்கு ஒருவன் தானம் கொடுத்தால் அந்தத் தானம் பிரயோஜனமில்லாமல் போவதோடு தானம் கொடுத்தவனுக்குப் பாவமும் எமலோகத்தில் கடோரமான தண்டனையும் விதிக்கப் படுமென்று அம் மனு நூலில் விஸ்தாரமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் சிலவற்றை அடியிற் குறித்துள்ளேன்.

மனு, 3-97. வேதங்கள் அவைகளின் அர்த்தங்கள் இவைகளை முற்றும் கற்று அறியாத பிராமணனுக்கு தேவர்களையும் பிதுர்க்களையும் குறித்து ஒருவன் தெரியாமல் தானம் கொடுத்தால் அந்தத்தானமானது நெருப்பு அவிந்துபோன சாம்பலில் நெய்யை வார்த்து ஓமம் செய்தால் எப்படிப் பிரயோஜனப்படாதோ அப்படிப் போல் நசித்துப் போகிறது.

மனு 3-132. ஞானத்தினால் உயர்ந்தவனுக்கு தேவகாரியத்திலும் பிதுர்க் காரியத்திலும் தானம் கொடுக்கவேண்டியது. ஒருவன் இரத்தத்தினால் பூசப்பட்ட தனது கையை இரத்தத்தினாலேயே அலம்பினால் எப்படிச் சுத்தமாகமாட்டாதோ, அப்படியே ஞானமில்லாதவனுக்குக் கொடுத்த தானம் பயனில்லாமல் போவது மன்றி தானம் கொடுத்தவனுக்குப் பாவமும் உண்டாகும்.

மனு 3-133 வேதங்களை ஓதி உணராதவனுக்கு சிரார்த்தம் கொடுப்பவன் எவ்வளவு கவளம் அன்னம் அவனுக்கு உபயோகமாகும்படி தானம் கொடுக்கிறானோ அவ்வளவு கணக்குள்ள எரிந்துகொண்டிருக்கிற சூலம்ஈட்டி என்னும் இரும்பு கட்டிகளை, தானம் கொடுத்தவன் வாயில் எமலோகத்தில் எமதூதர்கள் புகுத்துவார்கள்.

மனு 3-135, பிதுர் சிரார்த்தங்களைத் தத்துவ ஆராய்ச்சி செய்து ஞானம் அடைந்தவர்களுக்கே கொடுக்கவேண்டியது.

மனு 3-142, களர் நிலத்தில் விதைத்தவன் எப்படிப் பலனடைய மாட்டானோ அப்படியே ஞானமில்லாதவனுக்குச் சிரார்த்தம் கொடுத்தவன் பலனடைய மாட்டான்.

மனு 3-149, பிதுர் காரியத்தில் தானம் வாங்கும் பிராமணனுடைய குலம் கோத்திரம் ஞானம் இவைகளை அவசியம் முயற்சியுடன் பரீட்சிக்க வேண்டியது.

மனு 3-151-வது சுலோகமுதல் 162 சுலோகங்கள் வரையில் கூறியிருக்கிறபடி வேதங்களை ஓதி உணராதவன் கிராமப் புரோகிதன், வைத்தியம் செய்யும் பிராமணன், கோவில் குருக்கள், வியாபாரத்தினால் ஜீவிப்பவன், ஜீவனத்துக்காக ஆடுமாடுகளை வைத்துக் காப்பாற்றுகிறவன், ஊராருக்கேனும் அரசருக்கேனும் ஏவற்றொழில் செய்கிறவன், ஔபாசனத்தை விட்டவன், வட்டி வாங்கிப் பிழைப்பவன், கூத்தாடுகிறவன், சம்பளம் வாங்கிக்கொண்டு வேதம் ஓதி வைப்பவன், அவனிடத்தில் வேதம் ஓதினவன், சமுத்திரத்தில் கப்பல் மீது சஞ்சரித்தவன், சோதிட சாத்திரத்தால் பிழைப்பவன் முதலான இவ்வித பிராமணர்களையும், க்ஷயரோகி, சொத்தைப் பல்லன், யானைக்கால் முதலான மகா ரோகமுள்ள பிராமணர்களையும் பிதுர் காரியங்களில் அவசியம் நீக்க வேண்டியது.

மனு 4-193. வேதம் ஓதி உணராதவனுக்குத் தானங் கொடுத்தால் கொடுத்தவனுக்கு உடனே தீங்கு உண்டாகும். தானம் வாங்கினவனுக்கு இறந்த பின் தீங்கு உண்டாகும்.

மனு 4-194. கற்றோணியால் ஆற்றைக் கடக்க யத்தனித்தவன் எப்படி அத் தோணியோடு தானும் அழுந்திப் போகிறானோ அப்படியே மூடனுக்குத் தானம் கொடுத்தவன் அம்மூடனுடன் தானும் அழிந்து போகிறான். மேற்கூறிய மனு நூல் சுலோகங்களினால் தானம் பெற யோக்கியதை இல்லாதவனுக்கு ஒருவன் தானங் கொடுப்பதால் அந்தத் தானம் பிரயோஜனமில்லாமல் போவதோடு தானங் கொடுத்தவன் எமலோகத்தில் எமதண்டனை அடைய வேண்டுமென்றும், எழுதி வைத்திருப்பதையும் புரோகித விசுவாசிகளும் பிதுர் சடங்குகளில் நம்பிக்கைக் கொண்டு பார்ப்பனக் கூட்டத்தாருக்கு வழங்கி வரும்நம்மவர்களும் உணர்ந்து இச்சடங்குகளெல்லாம் சோம்பேறிப்

இதிகாசங்கள்.

இராமாயணம் — பாலகாண்டம்.

14-ம் கட்டுரை

(திரு சந்திரசேகரப் பாவலர் எழுதுவது.)

சென்றவாரம் வெளியான 13-ம் கட்டுரையோடு பாலகாண்ட ஆராய்ச்சி முடிவடைகிறது. இதன் முன் முதலாவது கட்டுரையில் திருமால் ராமனாக பிறப்பதற்கு முன் செய்த தீய செயல்களும் இரண்டாவது கட்டுரையில் கலைக்கோட்டு முனிவனுடைய சிற்றறிவும் ஒழுக்கக் கேடும் மூன்றாவது கட்டுரையில் அசுவமேதயாகத்தின் ஆபாசங்களும், நான்காவது கட்டுரையில் தசரதன் அறுபதினாயிரத்து மூன்று மனைவியரை மணந்து அவர்களுடைய நலத்தைக் கெடுத்த செய்தியும், ஐந்தாவது கட்டுரையில் தாடகை, மாரீசன் முதலிய தமிழ்ப்பெருமக்களைப் பற்றி ஆரியர் கூறும் இழி மொழிகளும் அவர்களைத் தீயவரைப் போலக்காட்டும் ஆரியர்களுடைய இழிகுணமும், தாடகையை இராமன் கொன்ற தீயசெயலும், உத்தமனாகிய மகாபலிச் சக்ரவர்த்தியைத் திருமால் கொன்ற கொலைப்பாதகமும், வாயுபகவான் குசநாபனுடைய பெண்களிடத்தில் நடந்துகொண்ட தீய வொழுக்கமும், ஆறாவது கட்டுரையில் முருகக்கடவுளைப்பற்றிய ஆரியரின் ஆபாச வரலாறும் அறிவின்மையும், அக்கினியின் இழிவான செய்கையும், சகரன் குதிரையைத் திருடிய இந்திரனுடைய திருட்டுத்தனமும், தீயவொழுக்கமும், தன்னுடைய பெரியதாயாகிய திதியிடம் அவ்விந்திரன் நடந்துகொண்ட வெறுக்கத்தக்க நடத்தையும் கொலைபாதகமும், ஏழாவது கட்டுரையில் இந்திரன் அகலிகை என்ற முனி மனைவியை கூடச் செய்த கூடா ஒழுக்கமும், எட்டாவது கட்டுரையில் கோசிகமுனிவன் இந்திரனைச் சபித்ததும் அதன் பின் பிதுர்தேவதைகள் தாங்கள் உண்ணும் ஆட்டு விருஷணங்களை இந்திரனுக்குக் கொடுத்துத் தாம் விருஷணமற்ற ஆடுகளைத் தின்னும் புலைச் செயலும், ஒன்பது பத்து பதினோராவது கட்டுரைகளில் விசுவாமித்திரமுனிவனுடைய வெறுக்கத்தக்க வரலாறுகளும், [illegible] முதலிய முனிவர்களுடைய இழி குணங்களும், திருமால் சிவன் [illegible] பன்னிரண்டாவது கட்டுரையில் [illegible] மாற்றம் [illegible] பதின்மூன்றாவது கட்டுரையில் [illegible]

[illegible]

மக்களிற் பக்கவாதமும் நன்றாக ஆராய்ந்தோம். இனி இரண்டாவது காண்டமாகிய அயோத்தியாகாண்ட ஆராய்ச்சியைத் தொடங்குவோம்.

அதன் முன் இதைப் படிக்கும் அன்பர்களுக்குச் சில மொழிகள் கூற விரும்புகின்றோம். இதுவரை நமக்குத் தெரிந்தவரை நமது ஆராய்ச்சியைப் பற்றித் 'தமிழ் நாடு' என்ற பத்திரிகையில் சென்ற பங்குனி மாதம் 22-உ செவ்வாயன்று "நாயக்கர் பிரசாரம்" என்ற தலைப்பில் இலங்கை வைவே. துரைசாமி பிள்ளை என்பவரும், சித்திரை மாதம், 16-உ சனிக்கிழமையன்று "நாயக்கரின் பிரசாரம்" என்ற தலைப்பில் சாமிநாதன் என்பவரும் சில அடாமொழிகள் வரைந்துள்ளர். அவைகளைப் பற்றி நாம் மறுமொழி கூறத் தகுந்தவாறு அமையாது அவை மிகவும் அற்பமானவையாக இருந்தாலும் அவைகளை வாசிக்கும் சாதாரண மக்கள் மயங்காவண்ணம் சில கூறவேண்டுவது அவசியமாகின்றது.

முதலில் இலங்கைத் துரைசாமி பிள்ளை அவர்கள் கூற்றை ஆராய்வோம். இவர் ஆரியப் புரட்டை ஒப்புக்கொண்டு "கோசலை யாகம்செய்யவந்த ரிஷிபுடன் சோரம் போய் ஸ்ரீராமனைப்பெற்றுள் ('குடி அரசு' மாலை 3 மலர் 14 பக்கம்) என்பதைப் போன்ற மூழுப் புரட்டான, சுத்த ஆபாசமான பொய்யான, அசங்கிக வார்த்தைகளை வரைவதால் மதப் பற்றுள்ள இந்துக்களின் இரத்தம் கொதிப்பேறும்" என்று வரைகிறார்

நமது பிள்ளையவர்கள் இவ்வாறு எழுதுவதைப் பார்த்தால் இரத்தக்கொதிப்போடு வரைவதாகவே தோன்றுகிறது. மதத்தில் பற்றில்லாதார் மனிதரே ஆகார். ஆனால் மதம் என்பது இது, அதன் உண்மையாதின்ன என்று நன்றாக ஆராய்ந்து பற்றுக்கொள்ள வேண்டுமேயொழிய ஆராய்ச்சியில்லாது கொள்ளும் பற்று தக்கதாகாது. அறிவுடைய மக்கள் ஆராய்ச்சியிலேயே உண்மைப் பற்று உண்டாகுமென்பர். நமது பிள்ளையவர்கள் கொண்டுள்ள பற்று உண்மை ஆராய்ச்சியிலான பற்றல்ல. நாம் கூறிய கூற்றாகாது அவர் " " இடையிடையிட்டது; ஆனால் அது நாம் வரைந்ததின் சுருக்கமாம். அதில் இராமன் என்ற ஒரு சாதாரண அரசனை, தமிழ் மக்களாகிய நம்மை [illegible] ஆரியனாகிய மன்னை, இராமனென்ற அவர் [illegible] [illegible]

[illegible]

வெள்ளக்கோவில் அன்னதானம்.

சென்ற 28—6—28-ம் தேதி இவ்வூர் வர்த்தகரான ஸ்ரீமான் கிருஷ்ணப்ப செட்டியார்தம் திருமாளிகையில் நிகழ்த்திய தன் தமையனார் குமாரர்கள் திருமணத்தை முன்னிட்டு காலை பத்து மணி முதல் மாலை எட்டு மணி வரை குழவி முதல் கிழவி ஈறாக 5-மைல் சுற்றுப் புறங்களிலிருந்து வந்த ஏழைகள் ஆதி திராவிடர்கள் சுமார் 1500 மக்களுக்கும் வயிறார நல்ல உணவு அளித்து, வெற்றிலை பாக்கும் கொடுத்தனுப்பினார், அவரவர்கள் ஸ்ரீ செட்டியாரை வாயார வாழ்த்திச் சென்றார்கள் பக்கத்து ஊர்களில் இதே நாளில் பல கனவான்கள் திருமணம் நடந்தும் அவ்வூர் ஏழை மக்கள் பலரும் ஓடோடியும் இவிடம் வந்து உணவருந்திச் சென்றது விந்தையினும் விந்தை திரு செட்டியாரவர்கள் இதற்கு முன் இருமுறை நடாத்திய தம் மக்கள் திருமணத்திலும் இவ்வாறே நடத்திக் காட்டியதும் போற்றற்பாலதே இவ்வன்ன தாதாவுக்கு மேலும், மேலும், செல்வமும் திடகாத்திரமும், புகழும் பெறுக வேண்டுமென நேரில் கண்டவோர்வுண்மை விளம்பி வரைகின்றார்

சுயமரியாதைத் திருமணம்.

28—6—28 திரு செல்வேலி மீனாக்ஷிபுரம் கிராமத்தில் பட்டுவர்த்தகம் திருவாளர். கே. எஸ் முத்தையா அவர்கள் இல்லத்தில் செல்வி-மலையரசி அம்மையாருக்கும், செல்வன-சுப்பரமணியனுக்கும் பார்ப்பனீயத்தையும் ஒழித்தும் குருக்களின் குருட்டுப் பழக்கத்தைத் தவிர்த்தும் ஸ்ரீமான் முத்தையா அவர்களே திருமணத்தை சுயமரியாதைத் திருமணமாக நடத்தினார்கள். எவ்வித ஆடம்பரமுமில்லாமல் மணமகன் மணமகளுக்கு இல்லற நெறியை பண்டையத் தமிழர்களின் வழக்கப் பிரகாரம் போதித்து வாழ்த்தி சகோதரர்களுக்கும், விருந்தினர்களுக்கும் நல் விருந்து நடத்தினார்கள். நமது தமிழ் நாட்டு ஏனைய திருமணங்களையும் மேற்கண்டவாறே நடத்தும் படிக்கும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பிராமணியம் ஒழிந்த புரோகிதம் [illegible]

விபவ ஆண்டு வைகாசி மீ 30 ம் நாள் [illegible] கொட்டாணிபட்டியில் [illegible] [illegible]

[illegible]

[illegible]

[illegible] திருவா [illegible] [illegible] ஒழி [illegible] [illegible] அப்பா [illegible] [illegible] சந்தன, புஷ்ப, தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு, போஜனம் பரிமாறப்பட்டது

ஒரு புரோகிதக்கொள்ளை.

சாத்தூர் தாலூகா ஆமத்தூர் என்னும் கிராமத்தில் ஒரு பெரிய குடும்பஸ்தர் வீட்டில் ஒரு பெரியவர் தேக வியோகமடைந்து விட்டார். அவருக்கு கருமாதியென்ற முறை 11-ம் நாள் நடத்தினார்கள். அதில் பார்ப்பனப் புரோகிதர் ஒருவர் செய்த பின் கண்ட கூற்றுகளை நான் நேரில் பார்த்தபடியே இதில் எழுதுகிறேன்.

வந்த பார்ப்பனப் புரோகிதர் அழுக்கடைந்த பழங் கந்தை வஸ்திரம் தரித்திருந்தார். கையில் காய்ந்த தர்ப்பைப் புல் கொஞ்சமிருந்தது. பழைய பஞ்சாங்கமொன்றும் கிழிந்த துணியில் கரன்ஸி நோட்டுகளை பத்திரப் படுத்தி வைத்திருப்பது போல வைத்திருந்தார். அந்த ஆசான் வருகையை எதிர்பார்த்திருந்த குடும்பத்தார்கள் "அய்யவாரு ஒச்சதி! அய்யவாரு ஒச்சதி" என்று தெலுங்கில் சில நிமிஷங்களாக அதே பேச்சாக பேசிக்கொண்டிருந்தார்கள். அப்புரோகிதப் புமான் வீட்டிற்குள் வந்து நுழையுமுன் மேல் கண்டவாறு பேசிக் கொண்டிருந்தவர்கள் வீட்டினுள் நுழைந்தவுடன் "சாமி ரண்ட! சாமி ரண்ட" என்ற பேச்சு நடந்தது. புரோகிதர் குறுஞ் சிரிப்புடன் தம் இடது கையை மூக்குக்கு கீழாக கொண்டு போய் "தீர்க்காயுசு தீர்க்காயுசு' யென்று வரம் கொடுத்துவிட்டு "சாமான்களெல்லாம் வந்து விட்டதோ" யென்று கேட்டார். குடும்பத் தலைவர் பெரிய ஆடம்பாத்துடன் "எல்லாச் சாமான்களும் வந்து விட்டது" என்றார். புரோகிதருக்கு பழைய கந்தை உடுத்தியிருக்கும் ஞாபகம் வந்து விட்டதோ என்னமோ தெரியவில்லை. "வஸ்திரம் யெல்லாம் எடுத்திருக்கின்றீர்களா" என்று ஆவலுடன் கேட்டார். "அதுவும் வந்துவிட்டது" என்றார்கள்.

புரோகிதர் ஆரம்பித்தார் வேலையை; பச்சரிசி, பருப்பு, நெல், காய்கறி முதலிய சாமான்களை புரோகிதர்முன் கொண்டுவந்துவைத்தார்கள். புரோகிதப் புமான் ஒவ்வொரு சாமானையும் சாஸ்திரீக முறைப்படி வைப்பதுபோல பரப்பி கும்பம் முதலியவை வைத்து ஏதேதோ உளறினார். அரிசி, பருப்பு போதாது என்று கோபித்தார். குடும்பத் தலைவர் "அரிசி பக்காபடியில் 12 படி வாங்கியிருக்கிறதே" யென்றார். "ஏங்காணும் உன் தோப்பனார் ஒரு வருஷம்வரை அதாவது ஆட்டை திதிவரை சாப்பாட்டுக்கு எவ்வளவு செல்லுமோ அவ்வளவு வேண்டுமல்லவா நியாயத்துக்கு" யென்று புரோகிதர் பரிதபித்தார். எனக்கோ ஆத்திரம் பொறுக்க முடியவில்லை. திதி கொடுப்பவரின் இறந்துபோன பிதாவுக்கு வருஷ சாப்பாட்டுக்கு போதுமான வரை முன்னடியே சேகரித்து வைக்கும் ஆத்திரம் இந்த பாப்பானுக்கல்லவா வந்துவிட்டது! அதை குடும்பத்தார்கள் அறியவில்லையே! என்று நினைத்தேன். அதற்குள் வந்துவிட்டது 4 படி அரிசியும் 2 படி பருப்பும். புரோகிதர் மனம் வாட குடும்பத்தாருக்கு இஷ்டமில்லை. பின்னர் புரோகிதர் தனக்கு வாங்கி வைத்திருந்த புது வேஷ்டியை விரித்துப் பார்த்து ஒற்றை வேஷ்டியா யிருந்தமையால் "இது என்னங்காணும்? பெரியவர் மனம் திருப்தியடைய மாட்டாது போலிருக்கிறதே. வயது சென்ற பெரியவருக்கு மோக்ஷ லோகத்தில் குளிர்தாங்க முடியுமா, இரண்டு வேஷ்டியாவது வேண்டாமா" என்றார். அடுத்த நிமிஷமே வந்து விட்டது இன்னொரு வேஷ்டியும்.

மந்திரங்கள் ஜெபிக்க ஆரம்பித்தார் புரோகிதர். 2 வார்த்தைக்கு ஒரு தரம் 3 வார்த்தைக்கு ஒரு தரம் "பணம் போடு" என்ற மந்திரமும் வந்து கொண்டிருந்தது. வீட்டுக்காரர் மடியிலிருந்த சில்லரைகள் எல்லாம் போட்டு விட்டார். குடும்பத் தலைவரின் மடியைப் பார்த்துக்கொண்டே மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார் புரோகிதர். மடி நிறைய இருந்த சில்லரை 2 நிமிஷத்தில் தீர்ந்துவிட்டது அறிந்துகொண்டார். அநியாய பார்ப்பான் நிறுத்திக் கொண்டான் மந்திரத்தை. "என்னங்காணும் நீங்கள் வீட்டில் செலவு செய்கிறீரா இல்லையா. பெரியவர் மோக்ஷத்தில் போதுமான செலவுக்கு என்ன செய்வார், அவரவர் கையிலிருந்தால் தானே உதவும்" என்றார். வீட்டின் தலைவர் பின்னும் பத்து ரூபாய் நோட்டை எடுத்து வந்திருந்த பந்து ஒருவரிடம் கொடுத்து சில்லரை மாற்றிவரும்படி தெரிவித்தார். புரோகிதர் முகம் வெளுத்து 'விசனத் தோற்றத்துடன் "இன்னும 10 ரூபாயிக்கும் குறைச்சலாகவா மந்திரம் இருக்கிறது! நோட்டை மாற்றுவானேன்? நோட்டை இலையில் வையேன் பார்த்துக் கொள்வோம்" என்றார்.

தலைவர் மெய் மறந்தார், வேடிக்கை பார்க்கும் பந்துக்களில் ஒருவரின் தேர்தலின் பேரில் நோட்டை இலையில் வைத்தார். புரோகிதர் பின்னும் இரண்டொரு சொற்களைச் சொல்லிக்கொண்டு மந்திரங்களை முடித்துக் கொண்டே சாமான்களை ஒதுக்கி மூட்டை கட்ட ஆரம்பித்தார். கட்டினார் மூட்டைகள் மூன்று பேர் சுமக்க. வேலை முடிவதை எந்த இடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தானோ தெரியவில்லை ஒருமூட்டை தூக்கி துணை பார்ப்பான் வீட்டினுள் வந்தான். புரோகித பார்ப்பானுக்கு கோபம் வந்துவிட்டது. "இதுவரை எங்கேபோயிருந்தாயடா சும்பத தேவடியாள் மகனே" என்று திட்டிக்கொண்டு "செய்வினை திருந்தச் செய்" என்ற ஒரு பழமொழியை சொல்லிக்கொண்டு "துணைப் பாப்பானில்லாத திதி என்ன திதியடா" என்று சலித்துக்கொண்டே குடும்பத் தலைவரைப் பார்த்து "ஓய், இவருக்கு இரண்டு படி அரிசி, ஒரு படி பருப்பு, அதற்குண்டான தெக்ஷணை கொடும் ஓய்" என்றார். அவ்வாறே கொடுத்தார்கள்.

முடிவில் புரோகிதர் எதையோ மறந்தவர் போல் மேலேபார்த்து "ஓஹோ கோ மறந்து விட்டேன்! இறந்த பெரியவர் எந்த இடத்தில் படுத்திருந்தார்" என்றுகேட்டார். "இந்த கட்டிலில்தான் படுத்திருந்தார் என்று குடும்பத் தலைவர் ஒரு கட்டிலைக் காட்டினார். உடனே புரோகிதர் "ஆகா தீட்டு கழியவேண்டாமா. அதில் நான் உட்கார்ந்தாலல்லவா தீட்டு கழியும். கொடுங்காணும் நாலணா தெக்ஷணை" என்று வாங்கிக்கொண்டு கட்டிலில் உட்கார்ந்திருந்து எழுந்தார்.

மறுபடியும் இறந்தவரைகிடத்தியிருந்த இடத்தில் தண்ணீர் தெளித்தார். "நான் உட்கார்ந்தல்லவா தீட்டு கழிக்க வேண்டும்" என்று அதற்கும் நாலணா தெக்ஷணை வாங்கிக் கொண்டார். கடைசியாக சாமான்களை துணை பார்ப்பான் தூக்கிக்கொள்ள நோட்டு காகிதத்தையும் சில்லரைகளையும் புரோகிதர் இடுப்பில் சொருகிக்கொண்டு திதிக்கு வைக்காத சில பண்டங்களை கொடுக்கும்படி தலையை சொறிந்துகொண்டு பல்லைக்காட்டினார்.

ஒரு பெண்மணி திடீரென்று வீட்டின் அறைக்குள் நுழைந்தாள். பார்த்தார் புரோகிதர். அதுவும் பலித்துவிட்டது என்று காட்டின பல்லை காட்டினபடியே தனது துணியை கழைக்கூத்தாடிகள் விரிப்பதுபோல் விரித்துக்கொண்டு "அந்த குறைவுதான் எதற்கு" என்றார். அந்த அம்மணி சில பண்டங்களை கொண்டு வந்து பிச்சைக்காரனுக்கு போடுவது போல துண்டில் போட்டாள். புரோகிதர் "போரும் போரும்! எதேஷ்டம்! என் புத்தி பிசகு; முன்னமே சொல்லியிருந்தால் போதுமானவரை கொடுக்கத்தான் செய்வார்கள்" என்று சொல்லிக்கொண்டு "அடுத்த வருஷத்துக்கு ஆட்டைத் திதிக்கு ஒரு மாசத்திற்கு முந்தியே நாள் குறிப்பிட்டு சொல்லிவிடுகிறேன்" என்று இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிட்டுப்போய்விட்டார்.

ஐயோ! இந்த ஏமாற்றம் உண்டா! இப்படியும் பார்ப்பனரின் ஜீவனம் கழிய வேண்டுமா! ஏமாற்றுகிற பார்ப்பனர்களின் மாயவலையில் சிக்கி ஏமாறுகிற பார்ப்பனரல்லாத மக்களும் உலகத்தில் இன்னும் இருக்கிறார்களே! செத்த பிணத்தை மண்ணோடு மண்ணாய்ப் போகும்படி புதைத்து விட்ட பிறகு அச்சரீரமாவது அதனுள்ளிருந்த உயிராவது என்ன நிலையானதோ யென்பதை அப்பார்ப்பனப் புரோகிதர்கள் அறிவார்களா?

இறந்தவர்கள் மோக்ஷ லோகத்தில் சௌக்கியமாக ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு, புரோகிதர்களுக்கு சாமான்களும் செலவுக்கு பணமும் கொடுத்து கொழுத்துத் திரியச் செய்வது மூடத்தனம் என்பதும், "இப்பார்ப்பனரல்லாதமக்கள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறதைப் போலவே நம்மையும் கை கால்களுடன் பிரமன் சிருஷ்டித்து பாடுபட்டு சம்பாதிக்கும்படி வைத்திருக்க நாம் ஏன் ஒருவன் சம்பாத்தியம் செய்து வைத்திருப்பதை ஏமாற்றி தின்று திரிய வேண்டும்" என்பதும் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதார் மனதிலும் பார்ப்பனர்கள் மனதிலும் எப்போது உதிக்கிறதோ அப்போதுதான் நம் நாடு க்ஷேமமடையும்.

உண்மைச் சுயமரியாதை பக்தன்.

பார்ப்பனீயம் ஒழிந்த திருமணம்.

கும்பகோணத்திற் கடுத்த திருபுவனத்தில் 24—6—28 ல் திரு. தி. மு. பக்கிரிசாமி நாயுடு இல்லத்தில் நீர்த்தளமங்கலம் (1) திரு. மோ. சி. ராகவலு நாயுடு குமாரர் திரு. தாமோதர நாயுடுவுக்கும்,

2. டை ஊரில் 28—6—28 ல் திரு. க. முனிசாமி நாயுடுவுக்கும் பார்ப்பனீயம் ஒழிந்த திருமணங்கள் நடைபெற்றன.

பார்த்தசாரதி கோயிலில் வேலை நிறுத்தம்.

சென்னைத் திருவல்லிக்கேணி கோயிலில், பார்ப்பன அர்ச்சகர்களின் கொடுமைபொறுக்கமாட்டாது விக்கிரகத்தைச் சுமக்கும் சீர்பாதந்தாங்கிகள் (பார்ப்பனரல்லாதார்) இன்று வேலைநிறுத்தம செய்து விட்டார்கள் என்று அறிகின்றோம். இவ்வேலை நிறுத்தம் ஏற்பட்டதற்குக் காரணம் சீர்பாதந்தூக்கிகளுள் ஏற்பட்டிருக்கும் சுயமரியாதை உணர்ச்சியேயாகும் சென்னைப் பார்த்தசாரதி கோயிலில், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் சண்டை சென்ற கருடோற்சவத்தில் துவக்கமாயிற்று. கோயில் சொத்தில் வயிறு புடைக்கத்தின்னும் பார்ப்பன அர்ச்சகர்கள் பார்ப்பனரல்லாதாரை மதிப்பது கிடையாது. மற்றும் பார்ப்பனரல்லாதாராய சீர்பாதந்தாங்கிகளுக்கு அவர்கட்கு உரித்தாய பிரசாதத்தைக் கொடுப்பதுங்கிடையாது. ஏனெனின் சீர்பாதந் தாங்கிகட்குக் கிடைக்க வேண்டிய பிரசாதம் முழுதும் அர்ச்சகர்களின் காமக்கிழத்திகள் வீடுகட்குச் சென்று கொண்டிருந்தது. இதைப்பற்றி நம் பத்திரிகைகளில் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இக் கொடுமை ஒரு புறம் எரிந்து கொண்டிருக்க, சென்ற மே மாதம் 6-ந் தேதி

> "திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி ஆலயத்தில் கருடோத்சவத்தின் அமைதியான போக்கு அர்ச்சகர் சிலர் குறும்பால் அல்லற்பட்டு சுவாமிதூக்குபவர்கள் வேலை நிறுத்தம் செய்து சுவாமியை நடுத்தெருவில் விட்டுவிட்டுச் சென்றனர். அவர்களைச் சமாதானப்படுத்தி மீண்டும் சுவாமியைத் தூக்கச் செய்வதற்குச் சுமார் ஒரு மணிநேரத்திற்கு அதிகமாயிற்று. சுவாமியைத் தூக்கிச் செல்பவர்களை ஆலயப்பணியாளர்களான மற்ற அர்ச்சகர் முதலானோர் தாங்களும் அவர்களைப் போன்ற ஆலய ஊழியர்கள்தான் என்பதை மறந்து இறுமாப்புடன் நடந்து கொள்ளுவதால் பல இடுக்கண்களைற் பட்டு வருகின்றது. நேற்று (6-5-28) திருவல்லிக் கேணியில் நிகழ்ந்த சம்பவம் பெரிதும் கண்டிக்கத்தக்கதாகும். சுவாமிக்கு உடைத்த தேங்காயின் துண்டு ஒன்று கீழே விழுந்த போது அதனை சுவாமி தூக்கும் கரையார்களுள் ஒருவர் எடுத்ததால் அதனால் அவர்கள் தலைக்கு மேல் உட்கார்ந்திருந்த அர்ச்சகர்களில் ஒருவர் அவரை அடித்தார். இவ்வாறு அனாவசியமாகத் தம்முள் ஒருவர் அர்ச்சகரால் அடிக்கப்பட்டதைக் கண்டித்து ஆக்ஷேபிப்பதன் பொருட்டு மற்ற கரையார்கள் கோபங்கொண்டு இந்த அநீதிக்குப் பரிகாரங் கிடைக்காவிடில்தாங்கள் சுவாமியைத் தூக்கமுடியாதெனக் கூறி சுவாமியை நடுத்தெருவில் ஆயக்கால் மீது நிறுத்திவிட்டுச் சென்றனர். பிறகு ஆலய தர்மகர்த்தர்கள் முதலியோர் அவர்களைச் சமாதானப்படுத்த எவ்வளவு முயன்றும் பயன் படாதிருந்தது. இவ்வாறு சுவாமி நடுத்தெருவில் விடப்பட்டதனாலும் சுவாமி தூக்குபவர்களில் ஒருவரை அர்ச்சகர் அனாவசியமாக அடித்ததனாலும் அங்கு பொது ஜனங்களுக்குள் மிகுந்த மனவெழுச்சி யுண்டாகியிருந்தது. முடிவில் சுமார் ஒருமணி நேரத்திற்கப்பால் தர்மகர்த்தாக்களின் சமாதானத்தினால் தூண்டப்பட்டோ அல்லது அர்ச்சகன் குறும்புக்காக சுவாமியை நடுத்தெருவில் போட்டுச் செல்வதுமுறைமையாகாதென்ற உணர்ச்சியினாலோ அவர்கள் வந்து சுவாமியைத் தூக்கிச் சென்றதாகச் சொல்லப் படுகின்றது. இச்சம்பவம் நடந்ததற்குப்பின் தர்மகர்த்தாக்கள் அந்த அர்ச்சகனைத்தக்கவாறு தண்டிப்பதாக வாக்களித்து சுவாமிக்கு நைவேத்தியம் செய்வதை விட்டு விட்டு அர்ச்சகனை கீழே இறங்கச் செய்ததாயும் சொல்லப்படுகிறது.

இவ்வக்கிரமங்களைக்கண்டிப்பதற்காகவும், இனிமேல் விக்கிரகத்துடன் அர்ச்சகர்களைச் சேர்த்துத் தூக்கக்கூடாதென்று முடிவு செய்வதற்காகவும் ஒரு கூட்டம் 17-6-28 ஞாயிற்றுக்கிழமை கடற்கரையில் கூட்டப் பட்டது. அக்கூட்டத்தில் சென்ற மே மாதம் 6 ந் தேதி கருடோற்சவ தினத்தன்று விக்கிரகத்தைத் தூக்கிச் சென்ற பாவாடைசாமி செட்டியாரைப் பார்ப்பன அர்ச்சகர்கள் அடித்த அக்கிரமத்தையும், விசாரணை செய்யாத தருமகர்த்தர்களின் செருக்கைப்பற்றியும் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் இனிமேல் விக்கிரகத்துடன் அர்ச்சகரைச் சேர்த்துத் தூக்குவதில்லை என்ற முடிவுக்கு வந்தனர். இத்தீர்மானங்களை எல்லாம் தர்மகர்த்தாக்களுக்கும், அவர்கட்கு மேற்பட்டுள்ள போர்டாருக்கும் அனுப்பினார்கள். என்ன அனுப்பியும் தருமகர்த்தர்களேனும், மேற்பார்வையாளர்களேனும், பார்ப்பன அர்ச்சகர்களை, விசாரித்து நியாயம் பிறப்பித்தார்களல்லர். ஆகையால் சுயமரியாதை உணர்ச்சி பெற்ற சீர்பாதந்தாங்கிகள் அர்ச்சகனைத் தண்டிக்கும் மட்டும் விக்கிரகத்தைத் தூக்க முடியாதென்று வேலைநிறுத்தம் செய்துவிட்டார்கள். மற்றும் இனிமேல் விக்கிரகத்துடன் அர்ச்சகரை தூக்கிச்சுமக்க முடியாதென்றும் சொல்லிவிட்டார்கள். இச்சீர்பாதந் தாங்கிகளின் சுயமரியாதை உணர்ச்சியையும் நாம்பாராட்டுகின்றோம்.

கோயில்களில் விக்கிரகத்தைச் சுமப்பதே பெரும் பாரமாய்இருக்க அர்ச்சகனைச்சேர்த்து எவ்வாறு சுமப்பது? கேவலம் ஒருமனிதனை—விக்கிரகத்துக்குப் பூசை செய்யும் அர்ச்சகன் என்ற ஒரு கூலிக்காரனைச் சுமப்பதென்றால் அது சுயமரியாதையற்ற செய்கையாகும் என்பதை சொல்லவும் வேண்டுமோ. திருவல்லிக் கேணி சீர்பாதந்தாங்கிகள் சுயமரியாதை உணர்ச்சியை சிதம்பரம் மதுரை, ஸ்ரீரங்கம் முதலிய மற்ற கோயில்களிலிருக்கும் சீர்பாதந்தாங்கிகளும் பின்பற்றுவார்களாக.

"திராவிடன்"

பார்ப்பனீயத்தை யொழித்த மருத்துவர்களை பாராட்டுகிறேன்.

1-6-28-ல் திராவிடனில் வெளிவந்துள்ள வியாசத்தில், ஈரோடு லார்ட் நேபியர் வீதியிலிருக்கும் எஸ் பி. காத்தமுத்து மருத்துவர் அவர்கள் விபவ வருஷம் வைகாசிமாதம் 1-ந்தேதி அன்று தமக்கு ஆண் குழந்தை ஒன்று ஜனனமாயிருப்பதை முன்னிட்டு மேற்படியார் குழந்தை பிறந்த பத்தாவது தினத்தைக் கொண்டாடியபோது மேற்படி குழந்தைக்கு பெயர் சூட்டுவதற்கு பார்ப்பன புரோகிதரின்றி நம் யினத்தவர்களில் பெரியோர்களை கொண்டு மேற்படி காரியத்தை நடத்தியதோடு அன்றைய தினத்தில் கருவூரிலிருந்தும் சேலத்திலிருந்தும் நம் யினத்தவர்களைத் தருவித்து, மேல் ஜாதி யென்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர் நம்மவர்களையும் ஆதித்திராவிடர் என்று சொல்லும் நம் ஏழை மக்களையும்கோயிலுட் பிரவேசிக்காதபடி துரும்புறுத்தியும் அடிமை எனறும் சூத்திரன் என்றும் கொடுமைப்படுத்துவதையும் எடுத்துச் சொல்லி சுயமரியாதை உணர்ச்சியை நமது பந்துக்களுக்கும் ஊட்டியதற்காக அவரை மனமாரப் பாராட்டுகிறோம். அவருக்கும் அவரது பாலகனுக்கும் ஆயுள் விர்த்தியும் நிடகாத்திரமும் சுயமரியாதை உணர்ச்சியும் மேன்மேலும் உண்டாவதாக இனிவரும் சுபாசுப காரியங்களுக்கு பார்ப்பனப் புரோகிதரில்லாமல் மருத்துவ பெரியோர்களைக் கொண்டே மருத்துவர்கள் ஒவ்வொருவரும் தம் தம் காரியங்களை நடத்தி வரும்படிக்கு தாழ்மையுடன்கேட்டுக்கொள்ளுகிறேன்.

பார்ப்பனியம் வீழ்க. சுயமரியாதை வாழ்க.

மா. ஆறுமுகம், மலாயநாடு, மூவார்.

புரோகிதத்தை அறவேஒழித்த திதி.

மதுரை ஜில்லா, திலக்கோட்டை தாலூக்கா இரும்பாடி கிராமத்தில் உள்ள பெரிய மிராசுதார் திருவாளர் மு. பாமசாமி பிள்ளை, அவர்கள் வெகுகாலமாய் பார்ப்பனரை கொண்டு நடத்தி வந்த தம் தந்தையின் வருஷாப்திகத்தை சுயமரியாதையை முன்னிட்டு ஆனி-௴ 5-உ அன்று குருட்டு நம்பிக்கையான திதி என்னும் சடங்கையும் பார்ப்பனர்களுக்கு கொடுப்பதையும் முற்றிலும் ஒழித்து சுற்றத்தாருக்கும், நண்பர்களுக்கும், ஏழைகளுக்கும் விருந்திட்டு ஷை ஆண்டு விழாவைச் சிறப்பித்தார்கள்.

அறிவானந்த ஸ்வாமிகள்.

புரோகிதம் ஒழிந்த திதி

தென்காசித் தாலூக்காவைச்சேர்ந்த இடகால் கிராமத்திலிருக்கும் சைவவேளாள குலத்தில் உதித்த திருவாளர் வீ. பி. செல்லையா முதலியார் அவர்கள் தமது பாட்டியாரின் முதல் வருஷத்திதியை பார்ப்பனப் புரோகிதமில்லாமல் ஜூலை மாசம் 12,ந்தேதி வியாழக்கிழமை யன்று தமது பந்து மித்திரர்களுக்கும் சில ஏழைகளுக்கும் திருப்தியாய் போஜனம் செய்வித்து சிறப்பாக நடத்திவைப்பார்கள்.

எம். பி. ஆர். சுப்பையா முதலியார்

தாரா சசாங்கம்.

இரண்டுமாணுக்கர்கள் சம்பாஷணை.

(சித்திரபுத்திரன் எழுதுவது)

ராமசேஷன்:— அடே ஜோசப்! இன்று நல்ல டிராமா என்று நோட்டீஸ் பார்த்தேன் போகலாமென்றிருக்கிறேன்; நீயும் வருகிறாயா?

ஜோசப்—அது என்னடா அப்பா அப்பேர்ப்பட்ட நல்ல டிராமா? கொஞ்சம்சொல்லுபார்க்கலாம்?

ராமா— அதா? தாராசசாங்கம்; நல்ல சீன்களும் நல்ல பாட்டுகளுமுடையது.

ஜோசப்—என்னடா என்னமோ கொசமுசாங்கம் என்று சொல்லுகிறாய் அதன் கருத்து என்ன?

ராம— உனக்கென்னடா தெரியும்; நீ யோதற்குறி; அது உன் வாயிலேயே நுழைவதில்லை; அதற்குயார் என்ன செய்வார்கள்?

ஜோ.—அந்தக் கிரகமெல்லால் உன் வா வாயிலேயே நுழைபட்டும், நல்லவேலையாக என் வாயில் நுழையவேண்டாம். அதன் கருத்தென்னசொல்லு பார்ப்போம்.

ராம— தாராசசாங்கம் என்றால் தாரை சந்திரனுக்கு நிர்வாணமாய் எண்ணெய் தேய்க்கும் பாகத்தை நாடக ரூபமாய் பிரத்தியக்ஷத்தில் காட்டுவார்கள்.

ஜோ—அப்படியா? தாரை என்றால் என்ன? சந்திரன் என்றால் என்ன? இரண்டு பேருக்கும் என்ன சம்பந்தம் என்பதை முதலில் சொல்லு. அப்புறம் நிர்வாணத்தை பற்றியும் எண்ணை தேய்ப்பதைப்பற்றியும் கவனிக்கலாம்.

ராம— இனி உனக்கு அஸ்திவாரத்திலிருந்து சொல்லியாகவேண்டும்போல் இருக்கிறது.

ஜோ— சும்மாதானா ஒரு மனிதன் நிர்வாணத்தைப் பார்க்க வருகின்றது? அது இன்னது என்றுகூட தெரியவேண்டாமா?

ராம— சொல்லுகிறேன் கேள்.

ஜோ— சொல்லப்பா சொல்லு.

ராம— தேவர்களுக்கெல்லாம் குருவாக பிரகஸ்பதி என்பதாக ஒரு தேவகுரு உண்டு.

ஜோ— பொறு, பொறு. யாருடைய தேவர்களுக்கு?

ராம— எங்கள் தேவர்களுக்கு.

ஜோ—சரி, சரி. அதுதான் கேட்டேன், எல்லோருடைய தேவர்களுக்கு என்று எங்கே சொல்லி விட்டாயோ என்னமோ என்றுதான் கேட்டுப்பார்த்தேன். அப்புறம்?

ராம—அந்த தேவகுருவுக்கு தாரை என்கின்ற ஒரு பெண்சாதி உண்டு. தேவர்களுடைய குழந்தைகளையெல்லாம் அந்த பிரகஸ்பதியிடம் கொண்டுவந்து விட்டுத்தான் கல்வி கற்பிக்கின்றது வழக்கம்.

ஜோ—நிறுத்து நிறுத்து. அப்படியானால் அந்த பிரகஸ்பதி யென்கின்றவர் ஒரு வாத்தியாரா?

ராம—ஆமாப்பா, குரு என்றால் என்ன? வாத்தியாரென்றால் என்ன? இரண்டும் ஒன்றுதானே. உனக்கு இதுகூட தெரிவதில்லையே; உன்னோடு எப்படி அழுவது?

ஜோ— இரப்பா இரு. அதுக்குள்ளே கோபித்துக்கொள்ளவேண்டாம். குரு என்றால், இந்தப்பல்லக்கில் ஆனை, குதிரை, ஒட்டகை, மேளம், வாத்தியம் இதுகளுடன் மிரவணை, (ஊர்கோலம்) வந்து காண்டியில் தண்ணீர் விற்று பணம் கொள்ளையடிக்கிறானே அந்த ஆசாமியோ என்னமோ, அவனுக்கு சொந்த பெண்டாட்டி இல்லையென்று சொல்லுகிறார்களே, அப்படியிருக்க நீ இந்த குருவுக்கு பெண்டாண்டி இருப்பதாக சொல்லுகிறாயே, என்னப்பா அதிசயமாயிருக்குது என்றுதான் யோசிக்கின்றேன்.

ராம— அடே இந்த குரு வேறேபடா; நீ ஒன்றும் தெரியாமல் உளராதே.

ஜோ—அப்படியானால் அந்த குருவுக்கு என்னபேரு.

ராம— அவர்களுக்கும் குரு என்றுதான் பெயர். அவர்களெல்லாம் சமயாச்சாரியார்கள், மடாதிபதிகள், லோககுரு, குலகுரு, ஆச்சாரியர்கள், பண்டார சன்னதிகள், சுவாமிகள் என்றும் பலவிதமாகச் சொல்லப்படுபவர்கள். நான் சொல்லுகின்ற இவர் தேவகுரு. ஆதாவது தேவர்களுக்கு உபாத்தியாயர் என்று சொல்லப்படுபவர்.

ஜோ--நில்லு நில்லு; அவசரமாகப்போகாதே; எனக்கு புரியவேண்டாமா? முன் நீ சொன்னாயே லோககுரு என்று அந்த லோககுரு என்பவர் எந்த லோகத்திற்கு குரு

ராம— என்னப்பா உன்னோடு பெரிய தொல்லையாயிருக்கின்றது? ஒவ்வொன்றும் உனக்குச்சொல்லித்தொலைக்கவேண்டும்போலிருக்கின்றது.

ஜோ—சும்மாதானா நிர்வாணத்தைப்போய்ப்பார்க்கின்றது. அது இன்ன நிர்வாணம் என்று புரியவேண்டாமா?

ராம— கேலி பண்ணாதே, விவரமாய்ச் சொல்லுகிறேன் கேள்; எங்கள் ரிலிஜனை (மதத்தை) நீ படித்தால்தானே தெரியும். நடுவில் புகுந்து கொண்டு கேட்டால் சுலபத்தில் புரியும்படி சொல்லமுடியுமா?

ஜோ— ஓ ஓ ஹோ! இதெல்லாம் உங்கள் ரிலிஜனை (மதத்தை) ச்சேர்ந்ததா? அப்படியானால் கவனமாய் கேட்கின்றேன்; சொல்லுபார்ப்போம்.

ராம— லோக குரு என்பது ஒரு பட்டப் பெயர். அவர் பார்ப்பனர்களில் ஒரு கூட்டத்தாருக்கு மாத்திரம் சாமியார். அந்தக் கூட்டத்தாரின் செல்வாக்கினாலும் மற்ற மக்களின் அறிவீனத்தினாலும் அவரை எல்லாருக்கும் குரு என்று சொல்லி பணம் சம்பாதிக்க ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். இப்படிப்பல பேர்வழிகள் உண்டு. அது போலவே ஒவ்வொரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒவ்வொரு சாமியார் என்பவர் உண்டு. அவர்களை எல்லாம் இம்மாதிரி கவுரவமான பெயர்களால் அழைக்கின்றது எங்கள் வழக்கம். ஏனென்றால் ஒரு வகுப்பு சாமியாரை வேறு ஒரு வகுப்பார் பரிகாசம் பணணினால் அப்புறம் அந்த வகுப்புச்சாமியாரை மற்ற வகுப்பார் பரிகாசம் செய்வார்கள். அப்புறம் ஒருவருக்கும் யோக்கியதையில்லாமல் போய்விடும். ஆதலால் ஒருவருக்கொருவர் மரியாதை கொடுத்து மரியாதை வாங்கிக்கொள்ளுகின்றது வழக்கம். இந்த முறையில் அவர்களுக்கு அந்தப்பெயர் கிடைத்திருக்கின்றது. ஆதலால் தேவ குரு என்பவர் இதில் சேர்ந்தவருமல்ல. இந்த லோகத்தில் இருப்பவருமல்ல.

ஜோ—சரி இந்த சாமியார்களால் உங்களுக்கு என்ன லாபம் சொல்லு பார்க்கலாம்.

ராமல--ாபம்என்ன; கஷ்டந்தான். வருஷா வருஷம் வந்து வரி வசூல் செய்வதுபோல் பணம் கொள்ளையடித்துக்கொண்டு போகின்றது, அல்லது மடத்துக்கு முன்னோர்களால் விட்ட சொத்துக்களின் வரும்படிகளை அவர்கள் இஷ்டப்படி அனுபவிப்பது ஆகிய காரியங்கள் தவிர அவர்களால் மக்களுக்கு சாதிக்கப்படுவது ஒன்றும் கிடையாது.

ஜோ—எனக்கு நேரமாய்விட்டது இந்த சாமியார்களைப்பற்றி மற்றொரு நாளைக்குப் பேசிக்கொள்ளலாம் இப்போது நிர்வாண காக்ஷிக்கு சம்மந்தப்பட்ட அந்த தேவகுரு சங்கதி சொல்லு சீக்கிரம் முடியட்டும்.

ராம—மேலே சொன்ன அந்த பிரகஸ்பதி என்கின்ற தேவகுருவுக்கு தாரை என்கின்ற ஒரு பெண்ஜாதி உண்டு. அந்த அம்மாள் ரொம்பவும் அழகுவாய்ந்தவள். யௌவன பருவமுடையவள். இந்த பிரகஸ்பதி என்கின்ற குரு தாடியும் மீசையும் முளைத்து பார்க்கின்றதற்கு 'கிழப்பிசாசு'போல் இருப்பார். இப்படியிருக்கும் நாளையில் அந்த தேவகுருவிடம் படிப்பிக்க சந்திரனை அவன் தாய் தந்தையர்கள் பிரகஸ்பதியிடம் கூட்டி வந்துவிட்டார்கள்.

ஜோ—ஓடாதே ஓடாதே! கொஞ்சநில்லு சந்திரன் என்று இப்போது சொன்னாயே அது யாரு.

ராம—அட முட்டாளே சந்திரன் என்றால் யார் என்றுகூடவாத் தெரியாது. வானத்தில் தெரிகின்றதே, ராத்திரியில் வெளிச்சம் கொடுக்கின்றதே அந்தச்சந்திரன்தான். இதுகூடவா சொல்லித்தொலைக்கவேண்டும்?

ஜோ— கோபித்துக் கொள்ளவேண்டாமப்பா! சும்மாதானா நிர்வாணத்தைப்பார்க்க வருகிறது?
மானத்தில் தெரிகின்ற சந்திரனா ஒருவருக்குக் குழந்தையாகப் பிறந்து பிரகஸ்பதி என்கின்ற குருவிடம் படிக்கக் கொண்டு போய் விடப்பட்டான்.

ராம—ஆமாம், ஆமாம், ஆமாம். உனக்கு நூறுதரம்சொல்லித் தொலைக்கவேண்டுமாக்கும்.

ஜோ— தெரியாதவனுக்கு என்னைப்போல் தற்குறிக்கு தெரியும்படியாய்ச் சொல்லவேண்டாமா? அப்படியானால் நீ சொல்லுகிற சந்திரன் பிறப்பதற்கு முந்தி மானத்தில் சந்திரன் இருந்ததா இல்லையா?

தவிர பிஸ்பிஸ்பதியிடம் படித்துக்கொண்டிருந்த காலத்தில் மானத்தில் என்ன இருந்தது? எப்போதும் அமாவாசையாகவேயிருந்ததா? சற்று விளக்கு பார்ப்போம்?

ராம— என்னப்பா இழவு, நீ கிருஸ்தவன் என்பது சரியாய் இருக்கின்றது.

ஜோ— திடீரென்று அப்படிச் சொல்லி விடாதே. இதை உன் தம்பி கேட்பதாகவே நினைத்துக்கொண்டு சமாதானம் சொல்லி விளக்கப்பண்ணப்பா.

ராம—என் தம்பி இந்தமாதிரி கேள்விகள் கேட்பானேயாகில் அப்போதே அவனை நன்றாய் உதைத்து இனிமேல் இம்மாதிரி அதிகப்பிரசங்கித்தனமானதும்நாஸ்திகத்தனமானதுமான கேள்விகளை கேட்கவேண்டாம் என்று சரியானபடி புத்தி கற்பித்திருப்பேன்.

ஜோ—என்னடாப்பா கடைசியாக இப்படிச் சொல்லிவிட்டாய்! நிர்வாண நாடகம் பார்க்கவாவென்று வெகு ஒழுங்காய் கூப்பிட மாத்திரம் உனக்கு அறிவிருக்குது; அந்தக் கதையின் யோக்கியதை என்னவென்று கேட்டால் இப்படிச் சொல்லுகின்றாயே! இதுதானா உன்னுடைய மததத்துவம்.

ராம— இல்லையப்பா அதற்காக நான் சொல்லவில்லை. இம்மாதிரி கேள்விகள் கேட்பதெல்லாம் தப்பு. அதாவது இதனால் ஒரு மத தத்துவத்தை (இன்சல்ட்) அவமானப்படுத்தியதுபோல் ஏற்படுகின்றது. இதையெல்லாம் அறிந்துதான் பெரியவர்கள், பெரியவாள் சொன்னதையும் எழுதிவைத்ததையும் அப்படியே நம்பவேண்டுமென்றும் நம்பாமல் கேள்விகேட்பது நாஸ்திகம் என்றும் பாவம் என்றும் எழுதிவைத்திருக்கின்றார்கள். அதோடு இப்படி தர்க்கம் செய்பவனை சித்திரவதை செய்து கொன்றுவிட வேண்டும் என்றும் வேதம் சொல்லுகின்றது.

ஜோ—நல்லவேளையாக வெள்ளைக்கார அரசாங்கம் இருப்பதால் நீ கூட என்னைக்கொல்லாமல் விட்டாய்போலும். வெள்ளைக்கார அரசாங்கம் வேறுவகையில் எவ்வளவோ மோசமானதென்று சொல்லிக் கொள்ளப்படுவதாயிருந்தாலும் இந்தக்காரியத்துக்காவது இன்னும் கொஞ்ச நாளைக்கு இருக்க வேண்டும் என்றே எனக்குத்தோன்றுகின்றது. அதிருக்கட்டும் இதையாவது சொல்லுபார்ப்போம்.

ராம:- எதை?

ஜோ:- அதாவது எப்பொழுது சந்திரன் பிள்ளையாய்ப்பிறந்தான் எந்த உருவத்தோடு பிறந்தான். எப்படி மானதிற்கு (ஆகாயத்திற்கு) போனான் அதையாவது சொல்லு பார்ப்போம்.

ராம:— இதுவும் அந்தமாதிரி கேள்விகளைச் சேர்ந்ததுதான். தெய்வ மூலம், ரிஷி மூலம், நதிமூலம் ஆகியவைகள் ஒன்றும் கேட்கப்படாது என்பதும், கேட்பதும் அதைத் தெரிய விரும்புவதும் பாபம் என்பதும் எங்கள் வேதத்தில் சொல்லப்பட்ட கட்டளையாகும். ஆதலால் நான் இவைகளைப்பற்றிகவலை எடுத்துத் தெரிந்து கொள்ள முயற்சிக்கவேயில்லை. மற்றபடி இவைகளை உனக்குச் சொல்லக்கூடாது என்கின்ற நிர்ப்பந்தம் ஒன்றும் எனக்கு இல்லை.

ஜோ:— சரி அப்படியானால் அந்த வேதத்தை நீ பார்த்திருக்கின்றாயா? அதில் இம்மாதிரி எழுதி இருப்பது உனக்கு நேரில் தெரியுமா?

ராம- அதை நான் பார்க்கவில்லை; எங்கள் வேதத்தை எல்லோருமே பார்த்துவிட முடியாது.

ஜோ— அதென்ன அப்படி?

ராம— அப்படித்தான்; அதை சிலர்தான் பார்க்கலாம். அவர்கள் தவிர மற்றவர்கள் பார்த்தால் பார்த்தவர்களின் கண்ணைக் குத்தவேண்டும் என்றும் அதில் உள்ளதைக் காதால் கேட்டால் அந்தக் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்றும்வாயால் படித்தால் படித்த நாக்கை அறுக்கவேண்டும் என்றும் மனதில் பதிய வைத்துவிட்டால் அந்த நெஞ்சைப் பிளந்து அதை வெளியாக்கிவிட வேண்டும் என்றும் நிபந்தனை இருக்கின்றது.

ஜோ- அது எதில் இருக்கின்றது?

ராம- அதுவும் அந்த வேதத்தில் தான் இருக்கின்றது.

ஜோ- அதையாவது நீ பார்த்தாயா?

ராம- நான்தான் பார்க்கக்கூடாது என்று முன்னமே சொன்னேனே.

ஜோ- பிள்ளை உனக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது?

ராம- பெரியோர்கள் சொல்லித் தெரிந்தது.

ஜோ:- அப்படியானால் வேதத்தில் உள்ளது உனக்கும் தெரிந்து இப்போது எனக்கும் தெரிந்து விட்டதே. நீ சொல்கின்ற வேத நிபந்தனைப்படி பார்த்தால் உன் காதிலும் என் காதிலும் ஈயத்தைக் காச்சிவிட்டு உன் நெஞ்சையும் என் நெஞ்சையும் பிளந்தல்லவா ஆக வேண்டும்.

ராம- நீ என்னடாப்பா தொட்டதற்கெல்லாம் குதர்க்கவாதம்பேசுகின்றாய். இப்படியே பார்த்துக்கொண்டு போனால் உலகத்தில் எந்த மதமும் எந்த வேதமும் நிலைக்க இடம் இருக்காது. இந்த விஷயங்களையெல்லாம் நம்பித்தான் ஆகவேண்டும். ஒரு மாதிரியாகத்தான் பார்க்கவேண்டும்.

ஜோ- மற்ற மதங்களையும் வேதங்களையும் பற்றி நீ ஒன்றும்கவலைப் படாதே அவைகள் எப்படியோ போகட்டும். அவைகளைப் பற்றி இது முடிந்த உடன் கவனிக்கலாம். இப்போது உன் சங்கதியை அதாவது உன் தலைமேல் இருக்கும் பாரத்தைப் பற்றி நீ உணர்ந்திருப்பதை எனக்குச் சொல்லு அதாவது நீ இப்போது சொன்ன வேதம் என்பது யாரால உண்டாக்கப்பட்டது?

ராம- அது கடவுளால் உண்டாக்கப்பட்டது.

ஜோ- அந்த வேதம் கடவுளால் உண்டாக்கப்பட்டது என்று யார் சொன்னார்கள்?

ராம- அந்த வேதத்தில்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

ஜோ- வேதத்தில் அப்படி சொல்லப்பட்டிருக்கின்றது என்று உனக்கு யார் சொன்னார்கள்?

ராம- வேதம் பார்த்த பெரியோர்கள் சொன்னார்கள்.

ஜோ- அந்தப் பெரியவர்கள் அந்த வேதத்தில் உள்ளதை கேட்கவும் பார்க்கவும் படிக்கவும் யோக்கியதை இல்லாத உனக்கு எப்படிச் சொன்னார்கள்?

ராம:- இதெல்லாம் தான் அதிகப் பிரசங்கித்தனம் குயுக்தி வாதம், தர்க்கவாதம், நாஸ்திகம் என்று சொல்லுவது.

ஜோ— சரி, சரி, கோபித்துக் கொள்ளாதே. நிர்வாணக் கதையையாகிலும் சொல்லித்தொலை 'சந்திரனை' அவன் பெற்றோர்கள் பிரகஸ்பதியிடம் படிப்புச் சொல்லிக் கொடுக்க கூட்டிக்கொண்டு வந்தார்கள். அப்புறம்?

ராம— அப்படிக் கேளு. சொல்லுகின்றேன். கூட்டிக்கொண்டு வந்தார்களா? சரி கூட்டிக்கொண்டு வந்தார்கள். பிரகஸ்பதியும் சந்திரனை தனது மாணாக்கனாக ஏற்றுக் கொண்டார்,

ஜோ— சரி அப்புறம்?

ராம— சந்திரனுக்கு பிரகஸ்பதி படிப்புச்சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கும் நாளையில் ஒரு நாள் அவசரமாக தேவர்களுக்கு அரசனான தேவேந்திரன் பிரகஸ்பதியை கூப்பிட்டனுப்பினான்.

ஜோ— சரி, கூப்பிட்டனுப்பினான். அப்புறம்?

ராம— பிரகஸ்பதி தன் சம்சாரமாகிய தாரையைக் கூப்பிட்டு சந்திரனைச் சரியாகப் பார்த்துக்கொள்ளும்படிக்கும் தன் மாணாக்கனாகிய சந்திரனைக் கூப்பிட்டு தாரையைச் சரியாகப் பார்த்துக் கொள்ளும்படிக்கும் கட்டளை இட்டுவிட்டு தேவலோகத்திற்குப் போய்விட்டார்,

ஜோ— சரி சரி; கொஞ்சம்நில்லு; இங்கே ஒரு சின்ன சந்தேகம். என்னவென்றால், அந்த பிரகஸ்பதி தேவலோகம் போய்விட்டார் என்று சொன்னாயே அப்படியானால் இது அதாவது அப்போது சந்திரன் தாரை பிரகஸ்பதி ஆகியவர்கள் இருந்து வந்தது எந்த லோகம்?

ராம— இதுதானே அதிகப் பிரசிங்கித்தனம், நாஸ்திகம் என்பது.

ஜோ— சரி, சரி கோபித்துக் கொள்ளாதே. 'பிரகஸ்பதி' தேவலோகம் போய்விட்டார். அப்புறம் சொல்லு.

ராம—அப்புறமா? அப்புறந்தான் உன்னிடம் அதைப்பற்றிச் சொல்லுவது சரிபல்லவென்று நினைக்கிறேன்.

ஜோ— தாரை சந்திரனுக்கு நிர்வாணமாய் எண்ணை தேய்ப்பதை நேரில் பார்க்கலாம் வா என்று கூப்பிடுகின்ற நீ அந்தக் கதையைச் சொல்ல வெட்கப்படுகின்றாயே. இதுதானா உன்னுடைய மத பக்தி, ஆஸ்திகம், என்னைக் கூப்பிட்ட யோக்கியதை?

ராம— சரி சொல்லித் தொலைக்கின்றேன் கேளு.

ஜோ— சொல்லப்பா சொல்லு. "பிரகஸ்பதி தேவ லோகத்துக்கு போய்விட்டார், அப்புறம்?

ராம— போய்விட்டாரா...

ஜோ— சரி போய்விட்டார். அப்புறம் சொல்லு.

ராம— அப்புறமென்ன? அதைக் கூடச் சொல்லவேண்டுமா? சந்திரன் நல்ல அழகு உள்ளவன் என்பது உனக்குத்தான் தெரியுமே; ஆகாசத்தைப் பார்த்தாலே தெரியாதா?

(இதன் தொடர்ச்சி 13-ஆம் பக்கம் பார்க்க.)

திரு. முதலியாரவர்களின் திக்கு விஜயம்.

"நவசக்தியின்" தடுமாற்றம்

(திருச்சி சா. குருசாமி எழுதுவது)

திரு. முதலியாரவர்கள் "ஆண்டவன் திருவருளை முன்னிட்டே" போர்த்துறையில் இறங்கி விட்டார். 'குடி அரசின்' தலைவருடன் சமயச் சீர்திருத்தத்தின் பொருட்டு மாத்திரம்போர் தொடங்கி விட்டாராம். திரு. முதலியாரவர்களின் எதிர்ப்புக்கு ஒன்று விடாமல் பதில் கூறத்தயாராயிருக்கிறேன். முதலாவதாக, 'குடி அரசின்' வசை புராணத்தைப் பற்றி, அது "ஆண்டகைமையாகாது" என்பது ஆம். எல்லா அறிவாளிகளும், திரு முதலியாரவர்களைப் போன்று, மறை பொருளுள்ள மொழிகளாலும் மேற்பார்வைக்கு மங்களகரமான சொற்களாலும், உள்ளே வசை மொழி மாத்திரையை வைத்து அவருடைய தமிழ் பாண்டியத்தினால் மேலே வெல்லத்தை வைத்து, அறிவாளர்களுக்கும் ஏனையோர்க்கும் கொடுக்கும் பழக்கம் பெற்றிருக்க முடியாது. திரு. நாயக்கர் அவர்கள் மனதிற் தோன்றியதை அவ்விதமே ஒரே பொருள்படும்படி சொல்வதும் எழுதுவதும் தான் முடியும். "தெருக் கூத்துககும் கழைக்கூத்துக்கும் குத்துச்சண்டைக்கும் கூட்டஞ் சேர்வது இயல்பே...ஒரு நாள் சென்று பிராமணத்துவேஷப் பிரசாரஞ் செய்யினுங் கூட்டஞ் சேரும் நிலையில் நாடிருக்கிறது.........." இவ்வாறான மொழிகள் வசைபுராணமாக, பிறரொருவருக்கும் படாது என்பது திரு. முதலியார் கருத்துப் போலும். இவ்வளவு பெரிய பாண்டித்தியமும், மறைவாகக் கூறும் போற்றலும் திரு. நாயக்கருக்குக் கிடையாது என்பதை வணக்கமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்னும், வழவழ வென்று ஒருவர் மனஸ்தாபமும் இல்லாதிருக்கும்படி எழுதும் பெரும் வன்மை திரு நாயக்கருக்கும், வேறு எந்தப் பத்திரிகாசிரியருக்கும் இல்லையென்பதை எளியேனுடைய சிறிய அனுபவத்தில் அறிந்து கொண்டேன். நிற்க,

திரு. நாயக்கருடன் முதலியாரவர்கள், போர் தொடங்கி, தனக்கு ஆள், தோள், பொருள் வலிமை இல்லையென்றும், கடவுட்டுணையே உள்ளதென்றும், தமிழ்ப்பெரியோர்கள் பொருட்டு தம் உயிரினையும் இழக்கத் தயாரென்றும் முழக்கஞ் செய்கின்றார். அவர் தம் உடல் 1921 ம் ஆம் ஆண்டு குண்டுகளுக்கு இரையாக இருந்ததாம்! அதில் திரு. நாயக்கரும் சேர்ந்தவரோ அல்லவோ அறியோம். ஆமாயின் திரு முதலியார் சிறப்பாகக் கூறும் வண்ணம் எப்போர் முனையின் முன்னணியில் மார் தட்டி நின்று வெற்றி பெற்றனரோ? அவ்வுடல் வெறுப்புத்தன்மை இதுகாறும் அதாவது 7 ஆண்டுகளாக எக்காரணம் பற்றி மறைந்திருந்ததோ? அதை முதலியார் விரித்துக் கூறுவாராக! அவருக்கிருக்கும் ஆண்டவன் அருள்வலி, திரு நாயக்கருக்கு வாராவண்ணம் சுயநலப் பிராமணர் போல் முதலியாரும் சுவர்க்கத் திறவுகோலை எடுத்துக் கொண்டு விட்டாரோ என அஞ்சுகிறேன். இங்ஙனமிருக்க இவர் தம் சிறப்பாய வீரமுழக்கம் எற்றுக்கோ? காரணங்கள் கூறாது, திரு நாயக்கரை நாஸ்திகர் என்று எவ்விதம் கண்டாரோ தெரியவில்லை. நெற்றிக்குறிகள் இடுதலும் புராணங்களை (அவைகள் எவ்வளவு சுயமரியாதையின்றி எழுதப்பட்டிருப்பினும்) வாசித்தலும் தான் ஆத்திகம் என்று முதலியார் கருதியிருப்பரேல், அவர் தம் குறுகிய நோக்கிற்கும், பிறருக்குப் பயனற்ற தாய்மொழிபாண்டியத்திற்கும் வருந்தாமலிருக்க முடியவில்லை.

திரு. முதலியாரவர்களின் "உள்ளக்கிடக்கை" வெகுநாளாய் யாவரும் அறிந்ததே. சமயச் சீர்திருத்தம் தவிர மற்றெவ்விதத்திலும் முதலியாரவர்கள் திரு நாயக்கருடன் ஒத்த அபிப்பிராயமுடையவரென மொழிகிறார். இது, உண்மையாயின் யான் கழி பேருவகையடைகிறேன். மனிதனுக்குச்சமயம் இன்றியமையாதது என்பதை "குடி அரசு" எப்போது மறுத்தது? எந்த ஆச்சாரியார்களும் எந்த நாயன்மார்களும், எந்த முதலியார்களும் சகலருக்கும் ஒவ்வாத ஒரு குறிப்பிட்ட கடவுளையோ, ஒரு குறிப்பிட்ட நெற்றிக்குறியையோ, முறையையோ, வழக்கத்தையோ, போற்றியிருப்பின் அவர்களைக் குற்றம் கூறுவதிலும் அத்தகைய புராணங்களைக் கண்டிப்பதிலும் திரு முதலியாருக்கு எந்த ஆவேசத்திற்கு காரணம்யாது? இவைகள் யாவையும் நீக்கி சமத்துவத்தையே பரப்பிய புத்த சமயம் போன்ற ஒரு புது சமயம் திரு. நாயக்கர் முயற்சியால் தோன்ற நேரிடுமாயின் திரு முதலியாரின் பௌராணிகப் பெருமையும் ஆற்றலும் அழியும் என்ற அச்சம் முதலியாரவர்களுக்கு உண்டோ? "சமரச சன்மார்க்க" தலைவராய முதலியாரே இதற்கு அஞ்சுவாரேல் நம் எதிரிகளாய சுயநலத்தார் ஓலமிடுவதில் நாம் ஆச்சரியப்படவில்லை. இது கிடக்க,

நேர்மையில்லா முறையில் திரு. முதலியார் நமக்குள் சிறு கலாம் விளைவிக்க முயலுவதாகத் தெரிகிறது. திருவாளர்கள், இராமசாமி முதலியாரும் சின்னையா பிள்ளையும் குறிப்பளித்து வேற்றுமைப் படுகிறார்களாம். இதனால், திரு. நாயக்கரது செல்வாக்கு வெள்ளிடை மலையாகத் தோன்றுகின்றதாம். திரு. காந்தியடிகளின் ஒத்துழையா இயக்கத்தில் ஒரு கொள்கையிலேனும், அவரினின்றும் மாறுபட்ட கருத்துடையவரில்லராதிருந்தரோ? நிர்மாண திட்டத்தின் உயிராகிய கதருக்கே ஆபத்து நேரிட வேண்டிய உபாயங்களைக் காங்கிரசில் நுழைத்தது திரு முதலியார் மறந்தனரோ? அன்றியும், குறியிடுதலைப் போன்ற சிறு விஷயங்களில் மனிதர்கள் தம்மை அறியாமலும், பழக்கத்தின் காரணமாகவும், முக வசீகரத்திற்காகவும், பின்பற்றி வருவது முதலியார் அறிவாரா? சாந்துப் பொட்டு வைத்துக் கொள்வோரை எந்த சமயத்தினராய் முதலியார் ஏற்றுக் கொள்கிறார்? அவர்களுடைய சமயக் கொள்கைகளைப் பற்றி, முதலியார் விவரமாக அறிவுறுத்துவாராக. மேலும், இவ்வளவு பெரிய விஷயத்தைக் கவனித்து நல்ல சமயத்தில் முதலியார் எதிர்ப்புக்கு ஆதரவு அளிக்க உதவிய அவருடைய ஞாபக சக்திக்கு அவருடைய நன்றியறிதலை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இஃதொருபுறமிருக்க.

இயற்கை வருணனைக் காகவேனும் இதிகாசப் புராணங்களைப் படிக்கக்கூடாது என்ற கருத்து 'குடி அரசு'க்கும், திரு. நாயக்கருக்கும் இருப்பதாக, முதலியார் எவ்வாறு அறிந்தார்? "கம்பர் கவி வளப்பையும், சேக்கிழார் அன்பின் திறத்தையும், உணரும் தவம் 'குடி அரசு'த் தலைவர்க்கு மறு பிறவியிலாவது உண்டாகவும்" என எழுதுவது கல்விச் செருக்கினாலோ அல்லது திரு. நாயக்கர்பேரிலுள்ள அன்பினாலோ என்பது அறிவுடையோர் உய்த்துணர்வாராக! இதிகாச புராணங்கள் எந் நாட்டிலுமிருக்கின்றன. ஆனால், அவைகளின் காரணமாய் ஜனசமூக முன்னேற்றம் தடைபெறக்கூடியதாக இருந்ததேயில்லை. அக்கொடுமை நம் நாட்டிலே உள்ளது, அத்தகைய புராணங்கள் தான் திரு நாயக்கர் கண்டிப்பவை. அவைகளுள் முக்கியமானது இராமாயணம். இதைப்படிப்பவர்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சி உண்டாகுமா? கன்னிமேயோவின் நூலை [இந்திய மாதா] ஆங்கில மொழி பழகிற்காகப் படிக்கநேரிடின் திரு. முதலியார் அதனை திருக்குறளைப்போல் மனப் பாடம்செய்து விடுவாரா? பழையநூல் பழைய புராணம் என்று இன்னும் நம முன்னோருடைய பெருமையை மட்டும் புகழ்வதோடு- திரு. முதலியார் நின்று விடுகிறாரா. இங்கிலாந்தில் பழைய புலவர்களையும், கவிகளையும்விட இப்போதிருப்பவர்களுக்கு அதிகமான சிறப்பும்- பெருமையும் இருப்பதை திரு. முதலியார் உணர்வாரா? ஜி. கே. செஸ்டர்டன் எச். ஜி. வெல்ஸ், தாமஸ் ஹார்டி போன்றவர்கள் அழியாப்புகழ் பெற்றிருக்கையில் திரு. முதலியாரைப்போன்ற புலவர்கள் ஏன் தங்களுடைய ஆற்றலைக்குறைவாக எண்ணி உட்சென்று ஒடுங்குகிறார்கள் என்பது விளங்கவில்லை. வசைபுராணம் தெரியாதவராகிய முதலியார் எந்தக்குப்பைப் புராணங்களுக்குத் திரு நாயக்கரை ஒப்பிடுகிறாரோ அந்தப்புராணங்களை மாத்திரந்தான் "குடி அரசு" கண்டிக்கிறதே ஒழிய திருக்குறள் போன்ற பொது நூல்களை எல்லாம் குறை கூறுவதில்லை. இவ்வாறிருக்க- பொதுவாகத் 'தமிழ்க் கலைகளுக்கு ஏழரை நாட்டுச் சனி பிடித்தது' என்று கதறுகிறார்; இது திரித்துக்கூறும் குற்றத்தைச்சாரும். தமிழ்க்கலைகளுக்கு என்பதற்குப் பதில்- 'தமிழ் புராணங்களையே புரட்டி அவர்களால் வாழும் புலவர்களுக்கு" என்றிருப்பின், முதலியார் சொல்வது சரியாகும்.

கடைசியாக திரு. நாயக்கர் முதலில் ஒத்துழையாமையிலிருந்து பிறகு ஒத்துழைப்புக்குதிரும்பியது மூடநம்பிக்கையுடையவரென்பதைவிளக்குகின்றதாம். அரசியல் சக்கரம் சுழலுந்தோறும், மக்கள் கொள்கைகளும் மாறுகின்றன, மாறி வந்திருக்கின்றன என்பது திரு. முதலியார் அறியாததா? காந்தியடிகள் மகா யுத்தத்திலும் அதற்குமுன்பு போயர்யுத்தத்திலும் ஒத்துழைத்துபிறகு ஒத்து

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ ௵ ஆனி ௴ 25-௳

தொழிலாளர் துயரமும் சைமன் பஹிஷ்கார வேஷமும்.

இயற்கை அமைப்பிலேயே கைத்தொழில்களையும் தொழிலாளர்களையுமே ஜீவ நாடியாகவும் அணியாகவும் கொண்டு நிலவிய நம் நாடானது எந்தக்காலத்தில் ஆரியர்களால் மேல்கண்ட இரண்டுமற்ற அன்னிய நாட்டாருக்கு காட்டிக்கொடுக்கப்பட்டு அன்னிய நாட்டு நன்மைக்காக ஆளப்படும் அன்னிய ஆதிக்கத்திற்கு அடிமை ஆக்கப்பட்டதோ அன்று முதலே நம் நாட்டுத்தொழில்கள் கொஞ்சம் கொஞ்சமாய் அருகிப்போக வழி ஏற்பட்டதல்லாமல் தொழிலாளர்களும் தரித்திரத்திற்கும் துன்பத்திற்கும் ஆளாக நேர்ந்து வருடா வருடம் லக்ஷக் கணக்கான கைத்தொழிலாளர்கள் தொழிலில்லாமல் வேற்று நாடுகளுக்கு மிருகங்களாக ஏற்றுமதி செய்யப்பட்டும் வருகின்றார்கள்.

எஞ்சியுள்ள தொழில் மக்கள் உள் நாட்டு ஒரு சிறு கூட்டத்தினராகிய பேராசைகொண்ட முதலாளிகளிடமும், நம்மிடமும் நம் நாட்டிடமும் ஒரு சிறிதும் அன்பும் இரக்கமும் பற்றுதலும் அற்ற வெளிநாட்டு முதலாளிகளிடமும் கொடுமைப்பட்டு வருகின்றார்கள்.

இதன்பலனேதான் நம்நாட்டில் ஒவ்வொருநாளும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தமும், கதவடைப்பும், சத்தியாக்கிரகமும் பெண்டு பிள்ளை குட்டிகளுடன் பட்டினி கிடப்பதும், அடிபடுதலும், உதை படுதலும்; துப்பாக்கியால் சுடப்படுதலும், ஈட்டியால் குத்தப்படுதலும், சிறையில் அடைக்கப்படுதலுமான காரியங்கள் நடந்தவண்ணமாகவே இருக்கின்றன. நாம் நன்றாய் அறிந்த இந்த சுமார் பத்து வருஷம் தொழிலாளர் உலகத்தில் நடந்ததான கொடுமைகள் நினைத்தால் வயிறு பற்றி எரிகின்றது. இதைப்பற்றி ஏன் என்றுகூட கேட்க பொது மக்களிடை எவ்வித இயக்கமுமில்லை. யாதொரு உண்மைத் தலைவருமில்லை. தொழிலாளர்கள் பெயரை சொல்லிக்கொண்டும் அவர்களை காட்டிக் கொடுத்தும் அவர்களது உழைப்பால் பிழைக்கும் தேசியத்தலைவர்களுக்கும் தேசிய இயக்கங்களுக்கும் மாத்திரம் நம் நாட்டில் குறைவில்லை.

நம் நாட்டு ஏழைக்கைத்தொழில் மக்களின் கூலிகளின் வாயில் மண்ணைப்போட இதுவரையில் எத்தனைவித இயந்திரப் பிசாசுகள் வெளி நாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு வந்திருக்கின்றன என்பதை அறியாதார் யார்? இதைப்பற்றி யாராவது கவலைகொண்டு அதற்காக ஏதாவது பரிகாரம் செய்திருக்கிறார்களா? அர்த்தமற்ற சைமன் கமிஷன் பகிஷ்காரத்திற்காக கூச்சல்போட மாத்திரம் "தேசிய" இயக்கங்களுக்கு குறைவில்லை. தேசிய தலைவர்களுக்கும் குறைவில்லை. அதற்கு செலவுசெய்ய நம் முட்டாள்களின் பணமும் இருக்கின்றது. அன்றியும் ஏதாவது ஒரு சிறு கிராமத்தில் ஒரு ஏக்கராவுக்கு இரண்டணா நிலவரி உயர்த்திவிட்டால் உடனே வரிகொடா இயக்கம் ஆரம்பித்து பொது மக்களிடம் பணம் வசூலித்து வீரியதனம் செய்து தங்களை விளம்பரப்படுத்திக்கொள்ளவும் பல இயக்கங்கள் இருக்கின்றன; அதற்கேற்ற தலைவர்களுமிருக்கின்றார்கள். சைமன் கமிஷனை பகிஷ்காரம் செய்வதாக கூச்சல் போடுவதால் நாட்டிற்கு என்னவிதமான நன்மை விளையக்கூடும் என்பதை யாராவது உணர்கிறார்களா? சர்க்காரோ பஹிஷ்காரக் கூச்சலுக்கு பயந்து ஒரு சமயம் இணங்கிவந்து விட்டதாகவே வைத்துக்கொண்டாலும் நம் நாட்டுமக்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டு விடக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை.

சாதாரணமாக இந்தியாவுக்கு சுயராஜ்யத் திட்டம் ஏற்படுத்தும்போக்கியதை, உரிமை, அதிகாரம் ஆகிய இவைகள் ஒரு சிறிதும் வெள்ளைக்காரர்களுக்கோ 'பார்லிமெண்டுக்கோ கிடையாது என்பதை பிரிட்டிஷ் சர்க்காரே ஒப்புக்கொண்டு அவற்றை இந்தியர்கள் தலையிலேயே போட்டுவிட்டதாகவே வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுது இந்தியர்களின் சுயராஜ்யத்திட்டம் என்பது என்ன என்னவகை இருக்கமுடியும், யார் யாரால் கோலப்படுமென்பதை சற்றுயோசிக்கவேண்டும். திருவாளர்கள் சீனிவாசய்யங்கார், இரங்கசாமி அய்யங்கார், சத்தியமூர்த்தி, எம். கே. ஆச்சாரியார், பெசண்டம்மை, விஜயராகவாச்சாரியார், மாளவியா ஆகியவர்கள் இப்பொழுது ஏற்படுத்திக்கொண்டிருக்கும் தனித்தனி திட்டமா? அல்லது வருணாசிரம சபையார் என்பவர்களும், பிராமண சபையார் என்பவர்களும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் திட்டங்களா? அல்லது ஆதிதிராவிடர்கள் ஏற்படுத்தும் திட்டமா? அல்லது இந்து மகாசபையார் போடும் திட்டமா? அல்லது மகமதிய மகாசபையார்கள் ஏற்படுத்தும் திட்டமா? அல்லது கிருஸ்தவ சங்கத்தார்கள் ஏற்படுத்தும் திட்டமா? அல்லது காங்கிரஸ்காரர்கள் என்பவர்கள் திட்டமா? அல்லது அதற்குள் முளைத்த காங்கிரஸ், சுயாதீனக்கக்ஷிக்காரர் திட்டமா? அல்லது காங்கிரசு சுயேச்சைக்கக்ஷியார் திட்டமா? அல்லது திருவாளர்கள் சிவசாமி அய்யர், சீனிவாசசாஸ்திரிகள், சாப்ரு ஆகிய தனிப் பார்ப்பனர்கள் தலைமைகொண்ட மிதவாதிகள் சங்கத்தார் திட்டமா? அல்லது திரு ஜயக்கர், திரு ஜின்னா போன்ற வக்கீல் கொள்ளைக்காரர்கள் தனித்தனியாக ஏற்படுத்தும் திட்டமா? அல்லது ஜஸ்டிஸ் கக்ஷியார் என்பவர்கள் திட்டமா? அல்லது அதற்குள் முளைத்த ஒழுங்குமுறைக்காரர் திட்டமா? அல்லது சர்வகக்ஷி மகாநாடு என்பதாக ஒரு சட்டைக் கூட்டி, அதில் எல்லாகக்ஷியாருக்கும் எல்லாகூட்டத்தாருக்கும் இடம் இருப்பதாக வேஷம்போட்டு, தங்கள் கூட்டத்தாரைத் தவிர வேறு யாரும் வருவதற்கு இடமில்லாமல் சூழ்ச்சிசெய்து, அதற்கு எவ்வளவு தூரம் பிரதிநிதித்துவத்தன்மை இருக்கின்றது என்பதுகூட அம்மகாநாடு கூட்டுபவர்களுக்கும் அம்மகாநாட்டில் கலந்துகொள்ளுகின்றவர்களுக்கும்கூட தெரியாமல் ஒரு சிலர் ஒன்று கூடி, அதிலும் ஒரு முடிவுக்கு வாராமல் தாங்கள் தங்கள் சுய நன்மைக்கோ அல்லது ஒரு சில வகுப்பு நன்மைக்கோ ஏற்ற விஷயங்களையே பிரதானமாகக்கொண்டு விடியவிடியப்பேசி, கடைசியில் ஒரு முடிவுக்கும் வாராமல் அவரவர்கள் வந்தவழி திரும்புகின்றதான அந்தத்திட்டமா? அல்லது திருவாளர்கள் அண்ணாமலை, குப்புசாமி, அமீத்கான், ஆதிநாராயண செட்டியார், குழந்தை, முத்துரங்கம், வரதராஜுலு, ரத்தின சபாபதி, மாரிமுத்து உன்னியார் போன்றார்கள் மூலை மூலைக்கு ஜஸ்டிஸ் கட்சியையும் மற்றும் பார்ப்பனரல்லாதார்களையும் வைதுக்கொண்டு பார்ப்பனர்கள் மீதில் கவிபாடிக்கொண்டு பார்ப்பனர்கள் சொல்வதற்கெல்லாம் ஆமாம்சாமி போட்டு தலையாட்டி வரும் திட்டமா?

அல்லது சுத்தி இயக்கம், சங்கதன் இயக்கம் ஆகிய இயக்கத்தார்கள் தனித் தனியே போடும் திட்டமா? இதுபோன்று மற்றும் உள்ள சங்கங்களின் இயக்கங்களின் திட்டங்களில் எந்த திட்டம் இந்தியாவுக்காக இந்திய பிரதிநிதிகளால் போடப்பட்டு இந்திய மக்கள் பெரும் பகுதியோரால் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டம் என்று ஒன்றை நிர்ணயிக்கக் கூடும் என்பதாக இந்த பஹிஷ்கார "வீரர்கள்" நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்று யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

இதுபோலவே தஞ்சையிலோ, பர்டோலியிலோ, ஒரு கிராமத்தில் போடப்பட்ட அதிக வரி என்பதைக் குறித்து வரிகொடா இயக்கத்தை நடத்தி அந்த கிராமத்தார் வெற்றி பெற்று வரியை குறைத்துக் கொண்டார்கள் என்றே வைத்துக் கொண்டாலும் மற்றபடி நாட்டிலுள்ள பூமிகளுக்கெல்லாம் போடப்பட்ட அல்லது போடப் போகின்ற அதிக வரி என்பது இல்லாமல் போய்விடுமா என்று கேட்கின்றோம்.

பர்டோலி விஷயம் முடிவுபெற்றால் பர்டோலிக்கு வெற்றி என்று சொல்லிக் கொள்ளலாம். பக்கத்து ஊர்க்காரருக்கு என்ன லாபம். உதாரணமாக வைக்கத்தில் நடைபாதைய வெற்றி ஏற்பட்டது

என்று நாம் சொல்லிக்கொள்ள இடம் ஏற்பட்டது என்பதாகவும், அதனால் சிலருக்கு விளம்பரமும் பெருமையும் கீர்த்தியும் ஏற்பட்டதாகவும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவ்வெற்றி வைக்கத்திற்கு அடுத்த ஆலப்பிழை அம்பலப்பிழை என்பதான பக்கத்து கிராமங்களுக்குக்கூட பயன் படாமல் வழக்கம்போல் உள்ள கொடுமைகள் ஆங்காங்கு நடைபெற்றுக் கொண்டுதான் வருகிறது.

இதுபோல் இரண்டு வருஷத்திற்கு முன் சட்டசபைகளிலும் பெரியவெளியேற்றமும் நடந்தது. அதை ஒரு பெரிய தியாகம் என்றும் கொண்டாடப் பட்டது. முடிவில் அதனால் ஏற்பட்ட பலன் என்ன? எனவே இம்மாதிரியான பகிஷ்காரத்தாலும் சத்தியாக்கிரகத்தாலும், வெளியேற்றத்தாலும், வரிகொடா இயக்கத்தாலும், மக்களுக்கோ நாட்டிற்கோ ஏற்படும் வெற்றிகள் எவ்வளவு பெரியதாயிருந்தாலும் அதனால் ஏற்படும் பலன் எவ்வளவு, நாட்டிற்கும் நாட்டின் ஏழை மக்களுக்கும் எவ்வளவு பயன்படக் கூடியது என்பதைத்தான் இங்கு கவனிப்பதற்காக இதை எழுதினோம்.

வங்காளத்தில் நிரபராதிகளான தேசபக்தர்களை யாதொரு காரணமும் சொல்லாமல் சிறையிலடைத்து வைத்திருப்பதற்காக அத்தேச பக்தர்களின் தேசபக்தியை பாராட்டியாவது அல்லது அவர்களது கஷ்டத்தைப் பற்றியாவது இதுவரை எந்த தேசியமோ தேசபக்தர்களோ காங்கிரசோ யாராவது கவலை எடுத்து அதற்காக எந்த பகிஷ்காரமோ சத்தியாக்கிரகமோ வரிமறுப்போ துவக்கினார்களா என்று கேட்கின்றோம்.

சைமன் கமிஷன் நியமனத்தாலும், பர்டோலி மிராசுதாரர்களின் பூமிக்கு போடப்பட்டதாகச் சொல்லும் அதிக வரியாலும், நமது நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் அவமானமும் சர்க்கார் ஆணவமும் நஷ்டமும் பெரிதா? அல்லது வங்காளத்தில் நிரபராதிகளான யோக்கியர்கள் தேசபக்தர்களை நிஷ்காரணமாய் ஜெயிலில் அடைத்து வைத்திருக்கும் விஷயத்தில் நாட்டிற்கு ஏற்பட்ட அவமானமும் சர்க்காரின் அக்கிரமமும் நஷ்டமும் அத்தேசபக்தர்கள் படும் கஷ்டமும் பெரிதா? என்று நடு நிலைமை வாய்ந்தவர்களைக் கேட்கின்றோம்.

இந்த நிலைகளை யெல்லாம் நன்றாய் உணர்ந்த வெள்ளை முதலாளிகளில் ஒரு பகுதியர்களான தென் இந்திய ரெயில்வே கம்பெனிக்காரர் இதுதான் சமயமென்று ஒரே அடியாய் ஆயிரக்கணக்கான தொழிலாள மக்களை பட்டினி போட்டுக் கொல்லத் துணிந்து விட்டார்கள். அதாவது "நாங்கள் ரயில்வே வேலைக்கு யந்திரசக்திகள் அதிகமாய் ஏற்படுத்திக் கொண்டோம்; ஆதலால் எங்களுக்கு கையால் வேலை செய்யும் ஆட்கள் 5000 பேர்கள் வரையில் தேவையில்லை" என்றும் மற்றும் ஏதேதோ சாக்குகளைச் சொல்லி கூலிகளைக் குறைக்கவும் இந்திய தொழிலாளர்களை நீக்கி விட்டு ஒன்றுக்கு நான்காய் கூலி கொடுத்து வெள்ளைக்கார ஆட்களை சீமையில் இருந்து தருவித்து வைத்துக் கொள்ளவுமான ஏற்பாடுகள் செய்து கொண்டு இதை அமுலில் கொண்டு வர ஆரம்பித்து விட்டார்கள். இந்தக் கஷ்டத்திலிருந்து நீங்க நம் தொழிலாள சகோதரர்கள் மேல்படி தென்னிந்திய ரயில்வே அதிகாரிகளை எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார்கள். தேசியத் தலைவர்களிடமும் பொது ஜனங்களிடமும் எவ்வளவோ முறையிட்டுப் பார்த்தார்கள்; சட்ட சபை அங்கத்தினர்களிடமும் சர்க்கார் அதிகாரிகளிடமும் குறை இரந்து பார்த்தார்கள்; ஒருவர் மூலமாகவாவது ஒரு பரிகாரமும் கிடைக்கவில்லை. கடைசியாக சாத்வீகமான சத்தியாக்கிரகத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

இதன் பலனாய் ரயில்வேக்காரர்கள் பதினாயிரம் பேர்களை வெளியில் தள்ளி தொழில்சாலையை அடைத்து விட்டார்கள் என்று சமாசாரம் தெரிய வருகின்றது. ஐயோ இந்திய நாடே! சென்னை மாகாணமே! உனது ஜீவாதாரமான அருமைச் சேய்கள் பதினாயிரம் பேர்கள் அதாவது அவர்கள் குடும்ப அங்கத்தினர்களையும் கணக்கில் சேர்த்தால் ஐம்பதினாயிரத்துக்கு மேல்பட்ட மக்கள் இம்மாதிரி வதைக்கப்படுகின்றார்களே! இதற்காக நீ என்ன செய்யப் போகின்றாய்? இவ்விஷயத்தில் உனக்கு ஈவு இரக்கம் என்பது ஒரு சிறிது மில்லையா? என்று கேட்கின்றோம். மலை இருக்கின்றது; ஆறு இருக்கின்றது; வயல் இருக்கின்றது; தோட்டம் இருக்கின்றது; தாது இருக்கின்றது; தங்கம் விளைகின்றது என்று பெருமை பேசிக் கொள்ளுகின்றாய் நான் வீரர்களைப் பெற்றவளாக்கும் சூரர்களைப் பெற்றவளாக்கும் என்று பெருமைபேசிக் கொள்ளுகின்றாய் இப்பதினாயிரம் மக்களும் அவர்களது பெண்டு பிள்ளைகளும் சேர்ந்து சுமார் 50000 பேர்களின் இந்த ஆபத்தான நிலைமைக்கு நீ என்ன பரிகாரம் செய்யப் போகின்றனை? அன்றியும் அவர்கள் தங்களது குறைகளைச் சொல்லி முறையிட்டுக் கொள்ள ஒவ்வொரு ஊர்கள் தோறும் வரப்போகின்றார்கள். அங்குள்ள பெரியார்களும் சுயமரியாதைமக்களும் அச்சகோதரர்களில் ஒவ்வொருவரையும் அன்புடன் வரவேற்று அவர்கள் குறைகளைப் பொறுமையாய்க் கேட்டு அவர்கள் எதிர்பார்க்கும் உதவியைச் செய்து அவர்களுக்கு உங்கள் ஆதரவு இருப்பதாக ரயில்வேக்காரர்கள் உணரும்படி செய்ய வேண்டியது உங்கள் கடமை என்பதை நாம் விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம்.

ஏழைத் தொழிலாளர்களே! நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை; உங்களது சகோதரர்கள் நீங்கள் செல்லுமிடங்களில் உங்களுக்கு ஆதரவளிப்பார்கள் என்றே எதிர்பார்க்கின்றோம். ஆனால் நீங்கள் மாத்திரம் இந்த நெருக்கடியான நிலைமையை பொறுமையுடனும் அஹிம்சையுடனும் புத்திசாலித்தனத்தோடும் சமாளியுங்கள் என்று உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.

திரு. முதலியார் அவர்களின் 'முடங்கல்'

திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களின் பெயரை தலையாகக் கொண்ட விஷயம் "குடி அரசில்" தலையங்கமாக வராமல் இப்போது உப தலையங்கமாக வருவதினாலேயே திரு முதலியார் தலையங்கத்திற்கு அருகர் அல்லாமல் போய்விட்டாரோ என்னமோ என்பதாக யாரும் கருதிவிடக் கூடாது என்பதாக முதலில் வாசகர்களுக்கு தெரிவித்துக்கொண்டு சில வாக்கியங்களுடன் நாமும் இக்கிளையை முடிக்கின்றோம்.

திரு. முதலியார் அவர்கள் 27-6-28ல "நவசக்தி" தலையங்கத்தில் "தொடர் முடங்கல்" என்னும் தலைப்புக்கொடுத்து நமக்குஒரு பகிரங்கக் கடிதம் எழுதியிருக்கிறார். அதில் 24-6-28ல "குடி அரசில்" "அவ்விஷயத்தை தற்கால சாந்தியாக நாம் நிறுத்தி வைக்கின்றோம்" என்றும், "திரு. முதலியார் அவர்களோடு போர் தொடுக்க கவலை கொள்ளவில்லை" என்றும் கண்டிருக்கும் வாக்கியங்களை எடுத்துக் காட்டி அதை ஆதாரமாகக் கொண்டு அதற்காக தாமும் போர்தொடுக்கவில்லை என்று எழுதியிருக்கிறார். அவைகள் எந்த வாக்கியங்களோடு இணைக்கப்பட்டது என்பதை எடுத்துக்காட்டி திரு முதலியார் வாசகர்களுக்கு நியாயம் செலுத்தாமல் போய் விட்டார். ஆயினும் நாம் அதைப்பற்றி கவலை கொள்ளாமல் திரு. முதலியார் அவர்கள் அவ்விரு வாக்கியங்களையும் ஒப்புக்கொண்டு முடங்கலுக்கு முந்தி நேர்ந்ததான அரிய நன்மைக்காக நாம் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இதை மாத்திரம் தயவு செய்து வாசகர்கள் சற்று கவனமாய்ப் படித்து மனதில் பதிய வைக்க வேண்டுகின்றோம்.

அதாவது, முதலாவது வாக்கியத்தின் முன் தொடர்பு. திரு. முதலியார் அவர்கள் "சீர்திருத்த"க் கட்டுரையைப் பற்றியது.

அதைப்பற்றிய சில ருஜுக்களை காட்டிவிட்டு "அவ்விஷயத்தை தற்கால சாந்தியாக நிறுத்தி வைக்கின்றோம்" என்று எழுதினோம். அவற்றில் சிலவற்றை திரு. முதலியார் அவர்கள் மறுத்துவிட்டு சிலவற்றை விட்டுவிட்டார்கள். இனி அம்மறுப்புக்கு மறுப்பு எழுதுவதால் நாம் திரு. முதலியார் அவர்களின் "முடங்கலை" ஒப்புக்கொள்ளாதவராவோம் ஆனதாலும், அன்றியும் அவ்விஷயம் என்றைக்கும் கிளப்பக் கூடியதானதாலும், இப்பொழுதே மறுப்பு வேண்டும் என்கின்ற அவசியத்தில் பட்டதுமல்லவாதலாலும், தற்கால சாந்தியாக நிறுத்திவைப்பதில் குற்றம் ஒன்றும் இல்லை.

மற்றபடி எஞ்சிய இரண்டாவது வாக்கியந்தான் மிக முக்கியமானது.

அதாவது "நாம் திரு. முதலியார் அவர்களோடு போர் தொடுக்கக் கவலை கொள்ளவில்லை" என்கின்ற வாக்கியத்தின் முன்தொடர்பு.

"எனவே திரு. முதலியார் அவர்கள் இயற்கைத் தோற்றம்தான் கடவுள் என்பதாக நினைத்துக் கொண்டிருக்கின்றார் என்பது பற்றியும்,

புராணங்கள் குப்பைகள் என்று எழுதியதுபற்றியும்,

அவைகள் (புராணங்கள்) ஆரியர்களால் புகுத்தப்பட்டன என்று எழுதியதைப் பற்றியும்,

அவைகள் சமய வெறியர்கள் பலரால் பாடப்பட்டவை என்று எழுதியது பற்றியும்,

அவைகளால் உலகில் மக்கள் ஒழுக்கங்களுக்கு கேடு சூழ்ந்தது என்று எழுதியது பற்றியும்,

நாம் திரு. முதலியார் அவர்களோடு போர் தொடுக்க கவலை கொள்ளவில்லை என்பதை திரு. முதலியார் அவர்களுக்கு வணக்கமாய் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்".

என்று எழுதியிருந்தோம் ஆதலால் திரு. முதலியாரவர்கள் இவற்றை அப்படியே ஒப்புக்கொண்டதானது நமக்கு எவ்வளவோ விடுதலையைக் கொடுத்திருக்கின்றது. இவை இதற்கு முன் பல தடவை பல இடங்களில் திரு. முதலியாரவர்கள் சொல்லாலும் எழுத்தாலும் நிகழ்ந்திருந்தாலும் நாம் "கடவுளை நிந்தனை செய்ததற்கு" ஆகவே நம்முடன் "அறப்போர் தொடுக்க"க் கிளம்பிய பெரியார் "இயற்கைத் தோற்றங்கள்தான்" கடவுள் என்று ஒப்புக் கொண்டாரானால் அது நமது கருத்துக்கு நன்மையா அல்லவா என்பதை யோசித்தால் நம கருத்துக்கொண்டவர்கள் பெரும் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது.

நிற்க புராண விஷயங்களைப் பற்றி பெரிய புராணம் ஒன்று தவிர மற்றப் புராணங்களை யெல்லாம் ஒரே அடியாய் குப்பை என்றும் ஆரியர்களால் புகுத்தப்பட்டு மத வெறியர்களால் பாடப்பட்டு மக்கள் ஒழுக்கங்களுக்கு கேடு சூழ்வதாக இருக்கின்றது என்று ஒப்புக் கொண்டதும் நமக்குப் பெரும் வெற்றியா அல்லவா என்பதை வாசகர்களே உணர்ந்து பார்க்கட்டும்.

இவ்வளவும் அல்லாமல், இதுவரை பல இடங்களிலிருந்தும், பல ஆராய்ச்சிக்காரர், பண்டிதர்கள் என்போர்களிடமிருந்தும் கிடைத்த வெற்றிகளை யெல்லாம் விட பெரும் வெற்றி என்னவெனில், அதுதான் பெரிய புராணத்தைப் பற்றியது. திரு. முதலியாரவர்களை பெரிய புராணத்தைப்பற்றி நாம் எழுதிக் கேட்டிருந்த பல வினாக்களுக்கு—அதாவது, பெரிய புராணமென்பது.

"இயற்கைக் கடவுளால்" அனுப்பப்பட்டதா? "இயற்கைக் கடவுளின்" திருவிளையாடல்களை உணர்த்துகின்றதா? "இயற்கைக் கடவுளை" உணர்த்துகின்றதா? "செயற்கைக் கடவுளை" உணர்த்துகின்றதா? அது வான சாஸ்திரமா? விஞ்ஞான சாஸ்திரமா? உடல் கூறு சாஸ்திரமா? உலகக் கூறு சாஸ்திரமா? "வேதாந்த" சாஸ்திரமா? "சித்தாந்த" சாஸ்திரமா? தேச சரித்திரமா? "தெய்வ" சரித்திரமா? "இகத்திற்கு" சாதனமா? "பரத்திற்கு" சாதனமா? "கற்புக்கு" வழியா? "களவுக்கு" வழியா? அரசியலா? மத இயலா? "கடவுள்" தன்மைக்கு நெறியா? மனிதத் தன்மைக்கு நெறியா? முடிவாக அதிலுள்ளதெல்லாம் உண்மைதானா? அன்றி, அது ஒரு சமயத்தாரால் மக்களின் நன்மைக்கென்று கற்பிக்கப்பட்ட கற்பனைக் கதையா அல்லவா? அதை எல்லோரும் ஒப்புக்கொண்டே தீர வேண்டுமா? ஒப்புக் கொள்ளாதவர்கள் காரணம்கூட காட்டக்கூடாதா?

எனப் பல கேள்விகளுக்கு திரு முதலியார் அவர்களை சமாதானம் கேட்டிருந்ததில் அவைகளுக்கு ஒரே பதிலாக,

"பெரிய புராணத்தின் உள்ளுரையை, இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுகள், அகச் சான்றுகள், நமது நாட்டைப்பற்றி இங்கு வந்துள்ளவர்கள் எழுதிவைத்த குறிப்புகள், சில புறச் சான்றுகள், சரித்திரப் பொருள்கள், கால நிலை, முதலியவற்றிற்கு அரண் செய்யும் அளவுக்குக் கொள்ளலாம்."

என்று தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

இதற்கு ஆதாரமாக பெரியார்கள் சுந்தரம் பிள்ளை, சீனிவாச பிள்ளை, சுவாமி வேதாசலம் முதலியோர்கள் நூல்களையும் ஆய்ந்து பார்க்கும்படி கட்டளையிட்டிருக்கின்றார்.

புராணப் பிடுங்கல்களுடையவும் அழுக்கு மூட்டைகளுடையவும் தொல்லைகளிலிருந்து விடுதலைபெற இது ஒரு வாரான ஆதாரம் என்பதே நமது அபிப்பிராயம்.

இப்பெரியார்களை அறிஞர்களாகக் கொண்ட எவரும், இனி அவ்வளவு சுலபமாக நம்மீது "புராணங்களை குற்றம் சொன்னான்" "கடவுளை வைதான்" "நாயன்மார்களின் கதையைப் பற்றி வாதம் நிகழ்த்துகின்றான்" என்று பழி சுமத்தி இதனால் "சமயம் போச்சு! நாயன்மார்களுக்கு வச்சு! கடவுள்களுக்கு ஆபத்து!" என்று ஆத்திரப் படமாட்டார்கள். என்றும் அப்படி ஆத்திரப் படுபவர்கள் முதலில் நம் திரு. முதலியார் அவர்கள் மீது பாய்ந்து விட்டுத்தான் பிறகு நம்மீது பாய வருவார்கள் என்றுமே நினைத்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

இங்கிலையில், வாதமொன்றும் வேண்டியதில்லை என்றும் தானாக வந்தால் வேண்டுமானால் பார்த்துக் கொள்ளலாம் என்றும் கருதுகின்றோம்.

இறுதியில் "அன்பு முறையில் ஒருவரை ஒருவர் போர் புரிந்து திருந்தமுயல வேண்டும்; பிடிவாதம் பெரும் பேய்" என்று எழுதியிருக்கிறார்.

ஒழுங்குமுறைப் போருக்கு அன்புமுறைப்போரே புரிவது நமது கடன். சூழ்ச்சி முறைப் போருக்கு "பிடிவாதப் பேய்" ஆட்டம் ஆடுவதே நமது குணம். நம்மைச் சிற்றினம் என்று கருதவில்லை என்று சொல்லுவதை நாம் ஏற்றுக் கொள்வதில் ஏதும் நஷ்டம் இருப்பதாய் தோன்றவில்லை. ஏதாவது ஒரு வசைமொழியை சொன்னவர்கள், சொல்லிவிட்டு இல்லை என்று சொல்வார்களானால், சொல்லப் பட்டவர்களுக்கு அது ஒரு வெற்றியாகும் என்பது ஒரு வழக்கு. அம்முறையில் திரு. முதலியார் அவர்கள் சொல்லி இருந்தாலும் இல்லா விட்டாலும் அதைப்பற்றிய கவலையை விட்டுவிட்டோம். அப்படி விட்டு விடுவதால் நமக்கு ஒன்றும் குறைந்து போகாது ஏனென்றால் திரு. முதலியார் அவர்களாலேயே இனியும் இம்மாதிரி எத்தனையோ தடவை கேட்க காத்திருக்கின்றோம்.

அப்படி திரு. முதலியார் இனியும் இம்மாதிரி சொல்லாவிட்டாலும் இன்னும் எத்தனையோ பேர் இப்படியும் இன்னும கேவலமாகவும் நம்மைச் சொல்லக் காத்திருக்கின்றார்கள் என்கின்ற உறுதி நமக்குண்டு. ஏனெனில், நமது தொண்டானது அவ்வளவு உரம்பெற்றதும் வசைமொழி கிடைப்பதாலேயே அது பலன் பெற வேண்டி இருப்பதால் நமக்கு வசைமொழி இல்லையே என்றும், அதைப்பற்றிக் கொண்டு நமது கருத்தை தாராளமாய் வெளியிட்டு வெற்றி பெற சந்தர்ப்பங்கள் இல்லையே என்றும் இப்போது நாம் கவலைப்படவில்லை.

முடிவாக நமது நலன் கருதி திருவருளை வழுத்துவதாக எழுதி அக்கட்டுரையை முடித்திருப்பதற்கு நாம் நன்றி அறிதலை காட்ட கடமைப்பட்டுள்ளோம்.

9-ம் பக்கத் தொடர்ச்சி.

மையாமையைக் கைப்பற்றி அதற்கும் பங்குவமில்லையென ஓய்ந்து சுயராஜ்யக் கொள்கைக்கு இடந்தந்து அதுவும் பலன் தாராது வேறு வழி பற்ற இததருணம் இருப்பதை திரு முதலியார் சற்று சிந்தித்தால் அடிகளுக்கும் நாயக்கரது பட்டத்தையே சூட்டி விட நேரிடுமோ என்று அஞ்சுகிறேன். மனிதன் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் எவை உண்மையானவை என்று படுகின்றனவோ அவைகளை திருநாயக்கர் கையாளும்படி சொல்கிறார். அவர் தன்னைக் கடவுளாக எங்கனும் சொல்லவேயில்லை. அவர் சொல்லை சத்தியம் என்று எங்கும் உறுதி கூறினதில்லை. இவ்வாறிருக்க திரு முதலியாரின் "ஆராய்ச்சியும் பாண்டித்யமும்" நாயக்கரது வெள்ளைச் சொற்களை விசேடார்த்தம் பண்ணி புதிதுபுதிதான அர்த்தங்களைக் கொடுக்க உபயோகமாகி விட்டன என்றும் இவையெல்லாம் நாயக்கரின் மேல் முதலியாருக்கு இருக்கும் பொறாமையின் காரணம் என்று பலர் சொல்வது போல் யான் சொல்லக் கூடவில்லை. ஆனால் வேறு காரணமும் தெரியவில்லை.

திரு முதலியாரவர்களே! தாங்கள் சமய சீர்திருத்தங்களைக் குறித்து அறமுறையில் நடத்தப்புகுந்திருக்கும் போர்க்கு யாமும ஆயத்தமாகி விட்டோம். எங்கள் தலைவரே போர் புரிய வேண்டுமென்பது இல்லையாயின், தாங்கள் சிறு தொண்டர்களோடு தங்கள் சமயப் போரை நடத்த முந்துங்கள். ஆராய்ச்சி பாண்டித்தியம் ஆகிய பூச்சாண்டிகள் இனி எங்களை வீணே அச்சுறுத்த வேண்டாம். வைக்கம் வீரர் வாழ்க! சுயமரியாதை வெற்றிபெறுக!

"திராவிடன்"

8-ம் பக்கத் தொடர்ச்சி.

ஜோ— ஆகாயத்தில் உள்ள சந்திரன் அழகுக்கும் பிரகஸ் பதி வீட்டில் உள்ள அழகுக்கும் என்ன சம்மந்தம்?

ராம— இதுதானே அதிகப் பிரசிங்கித்தனம்.

ஜோ— இல்லை இல்லை சொல்லு; சந்திரன் நல்ல அழகானவன்; அப்புறம்?

ராம— அதோடு வாலிப பருவம் உடையவன். அதுபோலவே தாரையும் நல்ல அழகும் வாலிப பருவமும் உடையவள். இப்படிப்பட்ட இரண்டு பேர் ஒரு இடத்தில் இருந்தால் அப்புறம் சொல்ல வேண்டுமா?

ஜோ— அதையும் சொல்லித் தொலே.

ராம— சந்திரன் மேல் தாரைக்கு ஆசை உண்டாய்விட்டது.

ஜோ— இது சகஜம்தான்; மாணாக்கன் மீது வாத்தியாரைப் போலவே வாத்தியார் சம்சாரத்துக்கும் ஆசை இருப்பது வழக்கம்தான். அதனால் என்ன?

ராம—அந்தமாதிரி ஆசையல்லடா, சந்திரன் மேல் தாரைக்குக் காதல் உண்டாய்விட்டது.

ஜோ— அப்படிச் சொன்னால் எனக்கு விளங்கவில்லையே.

ராம—உனக்கு நன்றாகச் சொல்லவேண்டுமாக்கும். காதல் என்றால் சந்திரனைத் தனது ஆசை நாயகனாகக் கொண்டு அவனிடத்தில் கலவி இன்பம் அனுபவிக்க வேண்டும் என்கின்ற ஆசையும் காமவிகாரமும் உண்டாய் விட்டது.

ஜோ— தேவர்களுக்கெல்லாம் குருவாயிருக்கும் தேவகுரு பெண்ஜாதிக்கு தன் புருஷனிடத்தில் படிக்க வந்த மாணாக்கன் மேல் இந்தக் காமவிகாரம் உண்டாய் விட்டது என்று சொல்லுகின்றாய்.

ராம—ஆம் ஆம்.

ஜோ— அப்புறம் சந்திரன் அதற்கு சம்மதிக்காமல் அவளைத் தடுத்து விட்டான்

ஜோ—அப்புறம்?

ராம—ஒரு நாள் தாரையானவள் தான் குரு பத்தினி என்கின்ற முறையில் சந்திரனை மாணாக்கன் என்கின்ற முறையில் எண்ணை தேய்த்து குளிப்பாட்டுவதுபோல் ஒரு ஏற்பாடு செய்து சந்திரனை உட்காரவைத்து எண்ணைக்கிண்ணத்தை தன் காலடியில் வைத்து தனது துகில் எண்ணை தேய்க்கத்தேய்க்க அவிழ்ந்து விழும்படியாக அவ்வளவு தளர்வாய் கட்டிக் கொண்டு எண்ணை தேய்க்க ஆரம்பித்தாள்.

ஜோ—சரி, ஆரம்பித்தாள்; அப்புறம்?

ராம :—எண்ணை தேய்க்கும்போது சந்திரன் தலைகுனிந்து கொண்டிருந்ததால் எண்ணைக்கிண்ணத்திற்குள் குரு பத்தினியுடைய அவயவ உருவங்களெல்லாம் நிழலில்தெரியும்படியாக இருந்தது. அப்படியே இருக்கும் போது சந்திரனுடைய புத்தியும்கொஞ்சம் கொஞ்சமாய் சபலப்பட்டுக் கொண்டே வந்தது.

ஜோ—யாருக்கு?

ராம—மாணாக்கனுக்கு.

ஜோ—சரி சபலப்பட்டு விட்டது; அப்புறம்?

ராம—இதே சமயத்தில் தாரைக்கும் மெள்ளமெள்ள அவளுடைய ஆடை அவிழ்ந்து கீழே விழுந்து விட்டது. தாரை நின்று கொண்டு எண்ணை தேய்த்துக் கொண்டிருக்கும் போது ஆடை கீழே விழுந்ததைப் பார்த்த சந்திரன் தலைநிமிர்ந்து பார்த்தான். ...

இது வரையில்தான் நாடகக் கொட்டகையில் சீன் நடக்கும். இதற்கு மேல்கொண்ட சங்கதிக்கு நாடக மேடையில் உடனே திரையைப் போட்டு விடுவார்கள். இதைத்தான் தாராசசாங்கம் என்று சொல்லுவது. இதைப் பார்க்கத்தான் உன்னைக்கூப்பிட்டேன்; வருகிறாயா இல்லையா சொல்லு. நீ வராவிட்டால் நானாவது போகிறேன். இன்று நல்ல பாட்டு, நல்லசீன், நல்ல காக்ஷி. மிகவும் வேடிக்கையாய் இருக்கும். பெண்கள்கூட அநேகம் பேர் வருவார்கள்.

ஜோ—சரி சரி; இந்த கதையைக் கேட்க எனக்கு எப்படியோ வாந்தி வருகின்றது போல் இருக்கின்றது.

இந்த லக்ஷணத்திற்கு இதைப் பார்க்க பெண்கள் கூட வருவார்கள் என்றாயே அது வேறையா இந்த அழகுக்கு? அவர்கள் எதற்காக வருவார்கள்.

ராம—முதலாவது, இது எங்கள் மதத்தைச் சேர்ந்த ஒரு பக்தி மார்க்க கதை. இக்கதையை கேட்டவர்களுக்கு மோக்ஷம் உண்டு என்று எங்கள் புராணங்களில் சொல்லப் பட்டிருக்கின்றது. இரண்டாவது இது ஒரு வேடிக்கை கதை.

ஜோ—என்ன வேடிக்கை கதை இது?

ராம—தாரை சந்திரனைக் கட்டாயப்படுத்திஇழுப்பது, அவன் சம்மதிக்க மாட்டேன் என்று வாதாடித் தப்பித்துக்கொண்டு ஓடுவது, சந்திரனை தாரை பலவந்தப் படுத்துவதன் மூலம் இருவரும் கட்டிப் புரளுவது, சிற்றின்பமான பாட்டுகள்பாடுவது, கடைசியாக நிர்வாண காக்ஷி காட்டுவது ஆகிய வேடிக்கைகளை பார்க்கக்கூடும். ஆதலால் எங்கள் பெண்களும் வருவார்களென்று சொன்னேன்.

ஜோ—இவ்வித நடவடிக்கை நடக்கும், இம்மாதிரி காக்ஷிகள் காட்டப்படும், இம்மாதிரி பாட்டுகள் பாடப்படும் என்கின்ற விஷயங்கள் எல்லாம் தெரிந்த பிறகுதானா உங்கள் ஸ்திரீகளும் ஏராளமாய் போகிறார்கள் என்கின்றாய்?

ராம—ஆம். தாராசசாங்க நாடகம் என்று சொல்லிவிட்டால் நாடகக்காரன் கூட இன்ன இன்ன காக்ஷி, இன்ன இன்ன வேஷம், இன்ன இன்னார் போடுவார்கள் என்பதை ஆண்களைவிட பெண்களுக்கே அதிகம் தெரியும்படியாக விளம்பரம் செய்வான்.

ஜோ—உங்கள் ஆண்கள் இதெல்லாம் தெரிந்துமா உங்கள் பெண்களை அனுப்புகிறார்கள்?

ராம—ஆம். ஏனென்றால் ஆண்கள் நாடகத்திற்கு புறப்படும்போது பெண்களும் அவசர அவசரமாய் தங்களை சிங்காரித்துக் கொண்டு புறப்படுவார்கள். ஆண்கள் இந்த காக்ஷியை பார்க்க வருகின்ற பல பெண்களை பார்க்கலாம், அவர்களைப்பார்த்து சிரிக்கலாம் என்றெ வருவார்கள். இது எல்லாப் பெண்களுக்கும் தெரியும்.

ஆதலால் ஆண்கள் தங்கள் பெண்களை வரவேண்டாமென்று சொன்னால் அவர்கள் இந்த இரகசியத்தை சொல்லி ஆண்களை கண்டித்து விடுவார்கள்.

தவிர சில ஆண்களுக்கு பெண்களை வீட்டில் தனியாய் விட்டுவிட்டு போவதற்கும் சந்தேகம். எனவே இருவரும் போவார்கள். அன்றியும் இப்படிப் போவதில் இன்னம் ஒரு லாபம் இருக்கின்றது. அதாவது மேல் கண்ட மாதிரியான காமாதுரமான பாட்டும் காக்ஷியும் செய்கையும் நாடகத்தில் காணப்படும்பொழுது பெண்களுக்கும் ஆண்களுக்கும் காமவிகார மேற்பட நேரும், அப்போது அவரவர்கள் புருஷனும் பெண்ஜாதியுமாயிருந்தால் அவரவர்களுடைய சொத்தை அவரவர்கள் பார்த்து ஒரு விதத்தில் திருப்தி அடையக் கூடும். அப்படிக்கில்லாவிட்டால் அச்சமயத்தில் வேறு ஒருவர் சொத்தை ஒருவர் பார்க்க நேரிடும். அதோடு இருவரும் போனால் ஒருவருக்கொருவர் பயந்து கொண்டு வேறு ஒருவரை பார்த்துக் கொள்ளவும் மாட்டார்கள். ஆதலால் புருஷனும் பெண்ஜாதியுமாக போவதே தனியாய் போவதைவிட மேலானது என்பது எனது அபிப்பிராயம்.

ஜோ—அது எப்படியோ போகட்டும். மேற்கொண்டு கதையின் முடிவு என்ன?

ராம—கதை முடிவு இதுதான் விசேஷ பாகம். மற்றது சாரமில்லாதது.

ஜோ—சாரமில்லாவிட்டாலும் சற்று சொல்லு கேட்போம்.

ராம—பிறகு ஒருவரை ஒருவர் கூடுகிறார்கள். பிரஹஸ்பதி வருகின்ற வரை இதே வேலையாய் இருக்கிறார்கள். இதனால் தாரைக்கு கர்ப்பம் தரித்து விடுகின்றது. பிறகு தேவகுரு பிரகஸ்பதி வந்து ஞானதிருஷ்டியால் தெரிந்து கோபித்துக் கொண்டு சந்திரனை 15 நாள் தேயும்படியாகவும் 15 நாள் வளரும்படியாகவும் சபித்து விடுகின்றார். அதுதான் வளர்பிறை தேய்பிறை என்பது. தாரை மீதும் ஏதோ கோபித்துக் கொள்ளுகின்றார். தாரைக்கு புதன் என்கின்ற பிள்ளையும் பிறக்கின்றது. தேவகுருவும் சந்திரனை சபித்துவிட்டு தன் பெண்ஜாதியை கடைசியாக மன்னித்து விடுகிறார். அதோடு கூட தாரையை உலகில் உள்ள கற்புள்ள ஸ்திரீகள் ஐவரில் ஒருத்தியாக சேர்த்து விடுகிறார். தாரையை நினைத்தால் நினைத்தவர்களுக்கு சகல பாவமும் உடனே தீரும்படியான சக்தியையும் அவர்களுக்கு ஏற்படுத்தி விடுகிறார். அதுபோலவே இன்னும் உலகத்தில் தினமும் கோடிக்கணக்கான பேர்கள் இந்த தாரையை நினைப்பதன் மூலம் தினந்தோறும் அவரவர்கள் செய்யும் பாவங்கள் மன்னிக்கப்பட்டு புதிது புதிதான பாவங்கள் செய்யவும் மக்களுக்கு எவ்வளவோ தைரியம் கொடுக்க உபகாரமாகவு மிருக்கின்றது.

இதுதான் தாராசசாங்க கதையின் தாத்பரியம்.

ஜோ—இக்கதையினால் உங்கள் குரு பெண்ஜாதிமார்கள் சங்கதியும், சிஷ்யப் பிள்ளைகளின் சங்கதியும் நன்றாய்த் தெரிய வந்தது. அதோடு உங்கள் கற்புக்கும் அர்த்தம் தெரிந்தது. இவ்வளவே எனக்கு போதும் நீ

சொன்னதிலிருந்தே இந்த கொசமுசாங்க கதையை நேரில் பார்த்தது போலவே ஆகிவிட்டது. இதை நீயும் உங்கள் பெண்களுமே நன்றாகப் பார்த்து மோக்ஷத்திற்குப் போங்கள்.

உங்கள் உபாத்தியாயர் பத்தினிமார்களும் இந்த கண்காட்சியை நன்றாகப் பார்த்து அந்தப்படியே நடந்து மாணாக்கர்களுக்கு கற்றுக் கொடுத்துவிட்டு பஞ்சகன்னிகைகளோடுசேர்ந்து அவர்களை நினைத்தவர்களுக்கெல்லாம் மோக்ஷத்தைக் கொடுத்துவரட்டும்.

மாணாக்கர்களாகிய நீங்களும் அவர்களுக்கு சிஷப் பிள்ளைகளாகச்சேர்ந்து சந்திரனைப்போலவே தினமும் எண்ணை தேய்த்துக் கொண்டு புதன்களைப் பெற்றுக் கொண்டிருங்கள்.

நம்மை மாத்திரம் அந்த மோக்ஷக் காட்சிக்கு கூப்பிடாதீர்கள்.

ராம—இதையெல்லாம் நீ எங்கிருந்து படித்துக்கொண்டாய் என்பது எனக்குத் தெரியும். 'குடி அரசு' என்கின்ற அந்த நாஸ்திகப் பத்திரிகையை நீ தினம் படிக்கின்றதை நான் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன். அது உன்னை இம்மாதிரி ஆக்கி விட்டது. நீ என்ன செய்வாய் உன்மீது தப்பிதமில்லை.

ஜோ.—குருபத்தினி சிஷப்பிள்ளைக்கு நிர்வாணமாய் எண்ணை தேய்ப்பதை பார்க்க இஷ்டமில்லை என்று சொன்னால் அது 'குடி அரசை' பார்த்ததனால் வந்த கேடாக்கும்? நாஸ்திகமாக்கும்? போதும் போதும். உங்கள் ஆஸ்திகத்தை மூட்டைகட்டி வையுங்கள். இனி என்னிடம் விரிக்காதீர்கள். எனக்கும் நேரமாச்சுது. நான் போய்வருகிறேன். மற்றொரு நாளைக்கு உங்கள் வேதத்தைப்பற்றி பேசிக் கொள்ளலாம்.

குட் பை—Good-bye.

''மாந்திரீகத்தை'' நம்பாதீர்கள்

வெகு நாளாக சகோதர சகோதரிகள் சிலரைக்கண்டால் 'மாந்திரீகன்' என்று பயப்பட்டு வந்ததுடன் அம் 'மாந்திரீகர்' பயமுறுத்தியும் வந்தார்கள் என்று முன்னோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஆனால் இப்போது பழய மூட நம்பிக்கைகளை ஒழிக்க நாம் ப்ரயாசை யெடுத்து அநேக மூட நம்பிக்கைகளை அகற்றி மக்களைச் சீர்திருத்திக்கொண்டுவந்தும் நம்மவர்களில் இன்னும் சிலர் 'மாந்திரீகம்' என்றால் பயப்படுகிறார்கள்.

பார்ப்பனர்கள் நம்மவர்களை யேமாற்றி திதி யென்றும் திவசம் என்றும் பல பல ஆரியப் பெயர்கள் சொல்லி காசு வாங்கியும்நம்மவர்களை ''தீண்டாதே! தொடாதே'' யென்று இகழ்ந்தும் வருவதைப்போல சிலர் நம்மைப் ப்ரமிக்கும்படியாயுள்ள கருத்தடங்கிய வாசகங்களைச் சேர்த்து அச்சிட்டு நோட்டீஸ் அடித்தும் பல போலி வைத்யர்களும் வயிற்றுப் பிழைப்புக்கு வழியில்லாதவர்களும் விளம்பரஞ் செய்து, கல்வி யறிவில்லா, பகுத்தறிவில்லா பாமரமக்களை மயக்கி, மாந்திரீக ஆசான், மாந்திரீக ரக்ஷை, மாந்திரீக தாயத்து, மாந்திரீக யந்திரம், மாந்திரீக கவசம், ஆஞ்சநேய கவசம், என்றும் இவைகளால் பயம் நீங்கும், ஜெயம் ஓங்கும், பெண் வசியமாவாள், புருஷன் வசியமாவான், பேய் பிசாசுகள் விலகும் என்றும் ஷெடி புஸ்தகங்களையும்' செம்புத் தகடுகளையும் விற்று வயிறு வளர்க்கிறார்கள். ''பரியாத வரங்கொடுக்கும் இவர்கள் ஏன் கஞ்சிப் பிச்சை எடுக்கவேண்டும்?'' என்பதை இனியாவது என் சகோதர சகோதரிகள் உணர்ந்து இம்மாந்திரீகத்தை நம்பி மோசம போகாதீர்கள்என்று எச்சரிக்கிறேன். ரா. மாணிக்கவாசகன்.

திரு நாயக்கரின் திருவுருவப்படம்.

நாகூர், ஷாப்கீப்பர் திரு, கே. பாலய்யா செட்டியார் அவர்கள் திரு. நாயக்கரவர்களின் திருவுருவப்படம் ஒன்று அன்புகூர்ந்து அனுப்பியுள்ளார். அந்த நாகூர் திரு ஜி. வி. நாயுடு அவர்களால் எடுக்கப்பட்ட போட்டோ படத்திலிருந்து மார்பிள் பிரிண்டாக செய்யப்பட்டு திரு செட்டியாரால் வெளியிடப்பட்டதாகும். படம் 8×10 அங்குல அளவில் பிடிக்கப்பட்ட போட்டோ படம் போலவேயிருக்கிறது. நூறு காப்பிகள் ரூ 5-க்கும், தனி காப்பி ஒன்று அணா 1-க்கும் கிடைக்கும். வேண்டுவோர்

''கே பாலய்யா செட்டியார்
ஷாப்கீப்பர்
நாகூர்''

என்ற விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

குடியர்களை குணமாக்கும்

அற்புத ''லிக்கோரின்''

''லிக்கோரினை'' தண்ணீர், பால், குழம்பு, மிளகுரசம், காப்பி, டீ, கள், பிராந்தி முதலிய எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபினி தின்போருக்கும் தெரிந்தோ தெரியாமலோ கொடுத்து வருவதில் குடியையும், அபினியையும் ஆயுளுள்ளளவும் விட்டுவிடுகிறார்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாதம். கடந்த 16 வருஷமாக ஏராளமான நற்சாட்சிப் பத்திரம் பெற்றது. பத்தியமே கிடையாது. 15, 20, 25 வருஷக் குடியருக்கு ஒரே புட்டி போதுமானது. தேகத்திற்கு யாதொரு கெடுதியும் செய்வதேயில்லை. தேகத்திற்கு பலத்தை யுண்டாக்கும். 40 நாள் புட்டி லிக்கோரின் விலை ரூ. 5. தபால் வி. பி. செலவு அணா 9 பிரத்தியேகம்.

ஆங்லோ இன்டியன் டிரக்ஸ் கம்பெனி,
கோயமுத்தூர், தென் இந்தியா.
ANGLO INDIN DRUGS Co.,
Coimbatore. (S. India)

மதனகாமம்,

(புதுச்சேரி பதிப்பு).

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. அதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிட லீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர்பெற்ற பிரெஞ்சிந்தியாவே முதன்மைவாய்ந்ததென்பது யாம் கூறாமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறாது விடுத்தனம். விலை ரூ. 1—0—0.

வஸந்த நிலையம், ரங்கப்பிள்ளை வீதி, புதுச்சேரி

மதனாமிர்தம்.

தாதுவிர்த்திக்கு உயர்ந்த ஹல்வா.

இதில் ஜாலாமிஸ்ரி, ஷகாகுல்மிஸ்ரி, பொன்னம்பர், கஸ்தூரி, சாவுஜபான் முதலிய உயர்ந்த சரக்குகளும், பழங்களும் சேர்ந்து செய்யப்பட்டிருக்கிறது. பலவித காரணங்களால் உண்டாகிற வெட்டைச்சூடு, நரம்புத் தளர்ச்சி, ஹ்ருதயம் துடித்தல், சுறுசுறுப்புக் குறைவு, போகத்தில் விருப்பமின்மை, அதில் இன்பம் தோன்றாமை, சொப்பன ஸ்கலிதம், துரித ஸ்கலிதம் முதலியவைகளை நீக்கி இந்திரிய வலுவையும், ஆண் தன்மையையும், உண்டாக்கும். ஸ்திரீகட்கு உண்டாகும் சூதகவாய்வுப் போக்கு, பிரசவித்த ஸ்திரீகட்கு உண்டாகும் இரத்த ஒழுக்கு, பலஹீனம் இவைகளை நீக்கி, புதிய பலத்தையும், அழகையும் உண்டாக்கும். ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள், உயர்ந்த மருந்து. குறைந்த விலை.

15 நாள் சாப்பிடக்கூடிய டப்பி 1-க்கு ரூ. 1-10-0 1 மாதம் சாப்பிடக்கூடிய டப்பி ரூ 3

மூளைக் கொதிப்பை

சிறு சந்தனாதித் தைலம்

நீக்கி, கண்களுக்கு குளிர்ச்சியையும், மூளைக்கு வலுவையும் உண்டாக்குகிறது. தலைவலி, பார்வைக் குறைவு, வெட்டைச் சூடு இவைகளை நீக்குகிறது. உயர்ந்த மூலிகைகளின் இரசங்கள், வேர்க்கியாழங்கள் முதலியவை சேர்த்து சாஸ்திர முறைப்படி செய்யப் பட்டிருக்கிறது. ஏராளமான நற்சாக்ஷிப் பத்திரங்கள் கிடைத்திருக்கிறது. குறைந்த விலை.

10 அவுன்ஸ் டின் 1-க்கு விலை ரூ. 2. 5 அவுன்ஸ் டின் 1-க்கு விலை ரூ. 1.

மேகப்படை.

மேக விஷ நீரால் உண்டாகும் அரைகடி, பத்து, வண்டுகடி, அரிப்பு, தடிப்பு, தேமல் முதலியவைகளை எங்கள் சர்வபடை நிவாரணி, 2 அல்லது 3 வேளையில் வெளிப் பிரயோகத்தினால் குணப் படுத்துகிறது. நீண்ட நாள் அநுபவமுள்ள உயர்ந்த மருந்து, எரிச்சல் இரணம் இவைகளை உண்டாக்காது. விலை புட்டி 1-க்கு அணா 8.

பண்டிட் சி. வா. ஞானசம்பந்தம்

சித்தவைத்தியம், ஜீவரட்சாமிர்த இராஜ வைத்தியசாலை, சீர்காழி S. I. R.

30 ஆடுகள்.

கும்பகோணம் ஆட்டுக்கொலை யாகமும் திருவான்மியூர் ஆட்டுக்கொலை யாகமும் நடைபெற்று இன்னும் ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் திருச்சி ஜில்லா லாலாப்பேட்டை கருப்பத்தூரா அக்கிரகாரத்தில் மற்றொரு கொடிய யாகம் கிளம்பியிருக்கின்றது. கும்பகோணம் பார்ப்பனர்களை விட கருப்பத்தூர் பார்ப்பனர்கள் மிகப் பெரிய குண்டோதரன்களாயும் இருக்கின்றார்கள். ஏனெனில் கும்பகோணம் பார்ப்பனர்கள் எட்டு ஆடுகளை உயிரோடு வதைத்து சுட்டுப் பொசுக்கித் தம் பாழும் வயிற்றிற்குள் கொட்டினார்கள். ஆனால் கருப்பத்தூர் அக்கிரகாரப் பேய்களோ நாளொன்றுக்கு ஒவ்வோராடாக 30 ஆடுகளை விதையைப் பிடித்து நசுக்கி இரத்தத்தை உறிஞ்சி, மாமிசத்தைச் சூட்டுத்தின்று யாகத்தின் பெயராலும், வேதத்தின் பெயராலும் ஒரே அடியாய் விழுங்கப் போகின்றன. என்ன கொடுமை என்ன அக்கிரமம். பார்ப்பனர்கள் இத்தகைய கொலை பாதகர்களாய் இருக்கின்றமையாற்றான், புத்தர் பெருமான் இப்பார்ப்பனர்களைப் பற்றிக்

"கொலையறமா மெனும்
கொடுந்தொழில் மக்கள்"

என்று கூறி அவர்களை மனிதப் பிறவியில் சேர்க்காது மிருகப் பிறவியில் சேர்த்தார். இத்தகைய மிருகப் பிறவியைச் சார்ந்து கொலைத்தொழில் புரியும் பார்ப்பன மாக்களை இன்னும் நம்மவர்களில் பலர் உயர்ந்த ஜாதியார் என்று கருதி அவர்கள் காலடியில் விழுந்து, அக்கால் கழுவிய அழுக்குத் தண்ணீரைத் தாம் குடிப்பதோடு தம் பெண்டு பிள்ளைகளையும் குடிக்கச் செய்கின்றனரே! அந்தோ! என்னே இவர்கள் தம் அறியாமை!

யாகத்தின் பெயரால் பார்ப்பனர்கள் ஆடு உரித்துத் தின்பது நமக்கு யாதொரு வியப்பையும் கொடுக்கவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மட்டும் இடங் கொடுப்பதாக இருந்தால், நரபலியாகம் என்ற பெயரால் நம்மையும் வைக்கம் வீரர் திரு. இராமசாமி நாயக்கர் அவர்களையும் மற்ற சுயமரியாதைத் தொண்டர்களையும் கொன்றுதின்று விடுவார்கள். வேத காலங்களில், ஏமாந்த இந்து அரசர்கள் அரசாட்சி செய்து வந்த காலத்து, ஆடுகளையும், மாடுகளையும், எருமைகளையும், பன்றிகளையும், குதிரைகளையும், மனிதர்களையும் கொன்று தின்ற பார்ப்பனர்கள் என்னதான் செய்யமாட்டார்கள்? அவர்கள் இந்து மதத்தின் பெயரால் வேதங்களின் பெயரால் கொலைகள் செய்வார்கள்; திருடுவார்கள்; விபசாரம் செய்வார்கள்; மோசம் செய்வார்கள்; மற்றும் பல அக்கிரமங்கள் செய்வார்கள். ஆகையினாற்றான் பார்ப்பனர்கள் செய்யும் இவ்வளவு அக்கிரமங்கட்கும் இடங்கொடுக்கும் மதப்புரட்டு, வேதப்புரட்டு, புராணப் புரட்டு, சாத்திரப்புரட்டு, புரோகிதப்புரட்டு முதலியவைகளை யெல்லாம் ஒழிக்க வேண்டும் என்கிறோம். பார்ப்பனர்கள் என்றால் அயோக்கியர்கள் என்ற உணர்ச்சி பரவியிருக்கும் இக்காலத்து, அவர்கள் இத்தகைய யாகங்கள் செய்துவமாற்றுவதுதான் சிந்தையிலும் விந்தையாய் இருக்கின்றது

இனி நாம் யாகக் கொலைகளைக் குறித்து அரசாங்கத்தாருக்கும், எஸ். பி. சி எ. சங்கத்தாருக்கும் ஒன்று எடுத்துரைக்க விரும்புகின்றோம். கழுத்தில் புண் உள்ள மாட்டின் சொந்தக்காரர்களையும், கோழி விற்பவர்களையும் தண்டிக்கும் அரசாங்கத்தார் யாகத்தின் பெயரால் படுகொலைகள் செய்யும் சாஸ்திரிகளையும், தீட்சதர்களையும், ஐயர் ஐயங்கார்களையும் ஏன் தண்டிக்கக் கூடாது? அரசாங்கத்தாருக்கு கண்கள் இல்லையா? அல்லது பார்ப்பனர் என்ன செய்தாலும் அது மதத்தின் பெயரால் நடைபெறுகின்றதென்றும் அதில் தலையிடக் கூடாதென்றும் நினைக்கின்றார்களா? இனி நம் நாட்டில் பல ஜீவகாருண்யச் சங்கங்களும் கொலைமறுப்புச் சங்கங்களும் இருக்கின்றனவே? அவைகள் ஏன் உறங்கவேண்டும் என்று வினவுகின்றோம்.

'திராவிடன்"

"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு

ஓர் அறிக்கை.

சந்தாதாரர்கள் எழுதும் ஆவலாதிகளில் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக் கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு [ரிஜிஸ்டர்] நம்பரை சந்தா நெம்பர் என்று நினைத்து அந்நெம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். சந்தா நெம்பர் என்பது சந்தாதாரரின் விலாசத்துடன் காணப்படும் நெம்பரேயாதலால் அந்நெம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கவனிக்கப்படமாட்டாது.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தா காலாவதியடைவதற்கு முன் அடுத்த வருஷத்திற்கு பத்திரிகை அனுப்பவேண்டாமென்று எழுதாதவரை அடுத்த வருஷத்திற்கும் பத்திரிகை அனுப்பும்படி கேட்டுக் கொண்டதாகவே வைத்துக்கொண்டு பத்திரிகை வி. பி. யில் அனுப்பப்படும். ஆதலால் சந்தா நேயர்களின் சம்மதத்தின் பேரிலேயே அனுப்பப்பட்டதாக ஏற்பட்ட வி. பி. யை கவுரவிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.

குடியாத்தம்
சமரச சன்மார்க்க சங்கத்தின்
வேண்டுகோள்

அன்பர்களே! நமது தலைவர் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களின் பொன் மொழிகளை உபதேச நன் மொழிகளாகக் கொண்டு, நம் நாடு பல தலைவர்களால் பல நூற்றாண்டுகளாக செய்த பல பிரசாரங்களாலுட் முன்னேறாததின் காரணத்தை செவ்வனே உணர்ந்து, நமது நாட்டுக்குக் கல்வியைப் புகட்டும் முறையில் தொண்டாற்றுவதுதான் முதற் கடமை என்றறிந்து கொண்டனம். ஆகவே குடியாத்தம் ரயில்வே ஸ்டேஷன் போர்டு எலிமெண்டரி பஞ்சம பாடசாலையின்கண் கல்வி பயில்கின்ற சுமார் 150 பிள்ளைகளில் தாய் தந்தை யற்றதும் தகுந்தபடி வாசிக்க புஸ்தகம் முதலிய கருவிகள் வாங்கவும ஹைஸ்கூலுக்குப் போய்வாசிக்கவும் பணமின்றி நின்றுவிடக்கூடியதுமான சுமார் 50, 60 ஆதித்திராவிட ஜாதி திராவிடப் பிள்ளைகளுக்கும், மற்றும் 10 மைல் சுற்றளவிலுள்ள பள்ளியில் வாசிக்கும் ஏழை மாணவர்களுக்கும் ஜாதி வித்யாசம் மத வித்யாச மின்றி புஸ்தகம் ஆடை முதலிய கருவிகள் அளிப்பதற் கிசைந்துள்ளனம். இதற்காக குடியாத்தம் சமரச சன்மார்க்க சங்கத்தின் ஆதரவில் "ஏழை மாணவர்கள் முன்னேற்ற நிதி" என்ற ஒரு நிதி திரட்டி ஏழை மாணவர்களுக்கு தொண்டாற் முற்பட்டிருக்கிறோம். இவ்வித தொண்டால் நமது தேச முன்னேற்றமடையுமென்பதற் கையமில்லை. நமது தலைவர் 1—7—28 ம் தேதி "குடி அரசின்" தலையங்கத்தில் "சாமியும் சமயமும் சமயாசாரிகளும்." என்று எழுதிய கட்டுரையின் உபதேச மொழிகளைக் கைக் கொண்டவர்களும் ஆவோம். எனவே "ஏழைமாணவர் முன்னேற்ற நிதி"யை ஒவ்வோர் இடமும் ஏற்படுத்துவதோ அல்லது இந் நிதிக்கு கீழ்க் குறித்த விலாசத்துக்கு தங்களா லியன்ற பொருளுதவி புரிவதோ இவைபோன்ற பணியை கால தாமதமின்றி இயற்றப் பன்முறை வேண்டும். தி. அ. ரங்கசாமி, தலைவர்,

"ஏழை மாணவர் முன்னேற்ற நிதி"
சமரச சன்மார்க்க சங்கம்,
குடியாத்தம் R. S.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

ஓர் இடைப்பாடு.

(காவிரி கிழான்)

தற்போது "குடி அரசு" க்கும் "நவசக்தி"க்கும் எழுத்துப் போர் நிகழ்ந்து வருகிறது. குடி அரசார்க்கு "குடி அரசே" குறிக்கோள். நவசக்தியார்க்கு சக்தி—நவசக்தி புதுச் சக்தி—சிவமாகிப் பரமாகும சக்தி குறிக்கோள். இவ்விரு கோள்களும் ஒரு வகையில் ஒருங்கே கொள்ளவேண்டுவனவே. இப்படிக் கொள்ளும் ஒருவன் இவ்விருவர்க்கும் இடைப்படுதலை இயையும். இவ்வகையில் யான் இணைப்பதையும், ஆசியல் துறையிலாதல் சமூகச் சீர்திருத்தத்திலாதல் கருத்து வேற்றுமையற்ற இருவோரும், ஏனையோரும் இணைத்துக் கொள்க. இதிலே கோள்களுக்கு இசைவன கொள்ளவும், இசையாதன தள்ளவும் வேண்டுவல். வசைநசை எள்ளத்தனையும் கொள்ளவுள்ளேன் அல்லன், உளநாயின் கள்ளுக; குறிக்கோள் ஒன்றே குறிக்கொள்க. வேண்டாமொழிகளும் விரும்பா மொழிகளும் நுழைபு மேனும், நலத்தில் நாட்டஞ் செலுத்த, அவை விழிபினும் விழா, கெஞ்சிலும் நுழையா. இது எல்லவர்க்கும் எளும்.

மருகரே! குடி அரசாரே! தங்கள் தர்க்க மொழி குதர்க்க மொழி யாவார்க்கு ஆகுக. எங்கள் ஊக்க உறுதி தருவதாக எங்கட்கு விளங்குகின்றது. அது விளங்கட்டும். எங்கள் அருஜன மொழியையும் அப்போது எள்ளினார்கள், எற்றினார்கள். அதையே அவர்களும், அவர்கள் பின் வந்தவர்களும் இப்போது போற்றுகிறார்கள். தங்கள் மொழிக்கு முந்தியது வந்துகொண்டிருக்கிறது; பிந்தியது இப்போதும் உளதேனும், இனி வரவிருக்கின்றதென்பதுறுதி. கவியை, கவிஞன் உள்ள ஞான்று கொள்வதினும் அவன் பேரிபினபின்னர்ப் போற்றப் பெறுவதே விரும்பற்பாலதாம். எதனாலோவெனின், பின்னால் மொழி மாத்திரையாய் நிற்க அதை அறிவார் அகமகிழ்வதனா லென்க. தங்களைத் தாக்கும் அருட் சக்தியாரும் அதனை வெளியிடுதற் கின்றி, நுங் கருத்தினையே நும்மினும் கற்றாராய்க் காட்டித் தூற்றுகின்றார்: கடிகின்றார் டாணங்களை. நுந் தொழிலினை அறிந்து அதனையே நேரிதெனக் கடைப் பிடித்திட்டார். இதினுறு புகழ் நுமக்கே நீதியுலகியும். நும்மைத் தூற்றிய வெழுந்து வெற்று நீற்றார் பலர். "மற்றுரைச குற்றங் கூறவ தெற்றுக்கு? நம் உற்றுரெனநேற்றுவலா நாமிருந்த நமாஞரே நஞ்சைவத்தக்கு யமனானர்." என்று காற்றை மாற்றிவிட்டனர். தாங்கள் கோரும் குற்றங் கடிந்த மதம், சமயம், தெய்வமிவை இனிக் கடிதிற் கிட்டலாம் போலும்.

கடைசியாக, திரட்டி உருட்டிய புராண இருட் கொண்டல்களிலே தியங்கிக் கிடந்து இடை யிடைத் தோற்றுவிக்கும் மின்னொளிக் காலத்தே உவம உலகத்து நச்சுக் கடலைக் கடந்து, பாலாழியில் உண்மை நூல் ஆராய்ச்சி யுற்ற வறிஞர் ஒரு சிலர் இன்றுயில் கொள்ளட்டும். ஏழை மக்கட் பரப்பினர், புராணங் கடவுளாலென் றேமாந்து போகாது, அமைப்பிற் பரந்து தெளிந்து ஆழ்ந்துள்ள உண்மை யுவர்க் கடலைக் கடந்தும், நங்காலத்து அருகிவரும் நாழியரிசி முதலாய நலங்களை நாளும் பெற்று நல முற்று வாழ்ந்து திகழ்வாராக.

இனியும் விரிக்கிற் பெருகும்: புராணம்! பெரிய புராண மாய்விடும் இதுவும் வரிற் காட்டுதும், மருகரே! எங்கள் பொருட்டுத் தாங்கள் காலத்தை வீணே கழிக்காது "சீர்திருத்த"ப் பொருள்பற்றி வெங்கட்டுப் பொழிந்து எங்களைக் காரியத்திற் செலுத்துமாறு காரிய உலகத்திற் காரியஞ் செய்யும். எங்களைத் தாங்கள் தவிர்க்கச் சொல்லிவரும் புராணக் குப்பைகளைக் கிளறித் துய்புந் தூசும் பறக்கவிடும் வம்பு உரைக்கு உரையுதவாது முயலுக; மேன்மேல் முயலுக. "முயற்சி திருவினை ஆக்கும்"; இடர்களை நீக்கி எந்நாளும் காக்கும், சீர்திருத்தும்.

சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.

சோத்துக்கடைப் பார்ப்பானின் பேராசையும் பெருமோசமும்.

ஐயா நான் 2-7-28 பகல் "அரகண்ட நல்லூர் அய்யர்" விலாசமிட்ட ஒரு சாப்பாடு ஹோட்டலில் சாப்பிடப் போனேன். அவர் முதல் நாள் சமைத்த பழய சாதத்தை ஜலத்தை பிழிந்து விட்டு சூடேற்றி இலையில் வைத்தார். நான் தொட்டுப்பார்த்து விட்டு அவரைக் கேட்டதற்கு "அதைத் தள்ளிவிடுங்கள், வேறே நல்லசாதம் போடுகிறேன்" என்று சொன்னார். முதலில் மோசம்செய்தவரிடம் சாப்பிட மனம் பிடிக்காமல் துட்டை கொடுத்து விட்டுவந்து விட்டேன். பிராமண ஓட்டலின் லக்ஷணம் இப்படியிருக்கிறது.

என்னுடன் முகையூர் கணக்கப்பிள்ளையும் அவருடன் அவரைச் சேர்ந்த மூவரும் சாப்பிட வந்தார்கள் அவர்கள் கதியும் இது தான். பொது ஜன நன்மையைக்கருதி இவ்வித சாப்பாட்டுக் கடைக்காரர்களுக்கு சுகாதார அதிகாரிகள் லைசென்ஸ் கொடுக்கக் கூடாதென்று வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன் பா. பாலசுந்தர ரெட்டி

இனாம்! இனாம்!! இனாம்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப்பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்.

ஸ்ரீ கொக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொணடுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத்தேன் முதலியனவும் உறவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்றதென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரம்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

பூளைமேடு பி. எஸ். ஜி. நாயுடு அண்டு சன்ஸ். தர்மஸ்தாபனம்.

1928 ஹு ஜுன் மாதம் 27 தேதி புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு மஹா சபைக்கு வேண்டிய கோரம் சேர்ந்ததால் தர்மஸ்தாபன ஆபீஸில் மகா-ள-ள-ஸ்ரீ வி. சி. வெள்ளியங்கிரிக்கவுண்டர் அவர்களின் தலைமையின் கீழ் மஹா சபை நடை பெற்றது.

தீர்மானங்கள்.

தர்மஸ்தாபனத்தின் 1928-ஹு மார்ச்-மீ 31-ந் தேதியோடு முடிவான வருஷத்திய பாலன்ஸ்ஷீட்டும் டைரெக்டர்களின் ரிப்போர்ட்டும் மகா-ள-ள-ஸ்ரீ பி. எஸ். வேணுகோபால சாமி நாயுடு அவர்களால் வாசிக்கப் பெற்று மகா-ள-ள-ஸ்ரீ வி. எஸ். செங்கோட்டய்யா அவர்களால் பிரேரேபிக்கப் பெற்று மகா-ள-ள-ஸ்ரீ B. நஞ்சுண்ட கவுண்டர் அவர்களால் ஆமோதிக்கப் பெற்று சபையோர் எல்லோராலும் ஏகமனதாய் அங்கீகரிக்கப் பெற்றது.

2. காலியாயிருந்த டிரஸ்டிஸ்தானத்திற்கு உடுமல்பேட்டை தாலூக்கா கணபதி பாளையம் மகா-ள-ள ஸ்ரீ டி. வெங்கிடசாமி நாயுடு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளதை அங்கீகரிக்கப் பெற்றது.

கடைசியாக மானேஜர் மகா-ள-ள-ஸ்ரீ பி. எஸ். ஜி. ரங்கசாமிநாயுடு அவர்களால் பிரசிடெண்டு அவர்களுக்கும் சபையோர் எல்லாருக்கும் வந்தனோபசாரம் செய்யப்பெற்று சபை இனிது நிறைவேறியது.

பி. எஸ். வேணுகோபால்சாமி நாயுடு
காரியதரிசி.

அய்யம்பேட்டை யூனியன் போர்டு தேர்தல்,

28-6-28ல் நடந்த அய்யம்பேட்டை யூனியன் போர்டின் ஸ்பெஷல் மீட்டிங்கில், ஜனாப் டி. ஆர். அப்துல் ஜப்பார் அவர்களின் பிரேரேபனையின் பேரில் சுயமரியாதை வீரர் திரு. பி. நியாகாசக் கடவாயர் யூனியன் போர்டின் தலைவராக போட்டியன்னியில் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அசோகி.

ஸ்திரீகளுக்கு உயரிய ஓர் திவ்ய ஔஷதம்.

ஸ்திரீகளுக்கு கர்ப்ப ஆசயத்தில் உண்டாகும் கெடுதல்களாகிய சிறுவயதில் ருதுகப நின்றுபோதல், காலக்கிரமம் தவறி ஆதல், குறைவாகக் காணுதல், அதிகம் காணுதல், ருதுக வயிற்றுவலி, பெரும்பாடு ஆகிய சகல கர்ப்பக குற்றங்களையும் 'அசோகி' என்னும் திவ்ய ஔஷதம் பூரணமாகக் குணப்படுத்தி தேக ஆரோக்கியத்தையும் சந்தான விருத்தியையும் தருவதில் சிறந்தது. கர்ப்பகாலத்தில் உபயோகிப்பதால் சுகப்பிரசவம் உண்டாகிறது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2. தபால் செலவு வேறு.

டைரக்டர், பார்த டிஸ்பென்ஸரி,
ரங்கே கவுண்டர் வீதி, கோயமுத்தூர்.

நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல் தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

பழனி. சி. எம். சாமி

குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், சுளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ 16. 6 நாள் புட்டி ரூ. 4. வி: பி. சார்ஜ் வேறு

ஒரு பிரபல டாக்டர் சொல்வதைக் கவனியுங்கள்,

நான் தங்களிடமிருந்து தாளக பஸ்பம் அரை தோலாவும், அயச்செந்தூரம் அரைத் தோலாவும் தருவித்து அதைசுவாசகாச முடையவர் ஒருவர் இவ்வியாதியில் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இனி பிழைப்பது அரிது என்று அழுதார். அவருக்குத் தங்களின் தாளக பஸ்பத்தைக் கொடுத்ததில் சுவாசகாசமென்னும் வியாதி தொலைந்து விட்டது. வியாதி சொஸ்தமான பின்பு அயச்செந்தூரம் பலம் உண்டாவதற்காகக் கொடுத்து வந்தேன். மேற்படியாருக்கு பூரணபழையபலம்ஏற்பட்டுவியாதியஸ்தர் ரொம்பவும் தங்கள் மருந்துகளின் பெருமையையும் அருமையான குணத்தையும் சொல்லி சந்தோஷப்படுகிறார். தங்கள் மருந்துகள் சித்தவைத்திய முறைப்படிக்கு முடித்த பெருமுறை மருந்துகள் என்று ரொம்பவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆயுள்வேத டாக்டர் எம். கிருஷ்ணசாமி நாயுடு,
அலங்கம் (வட ஆற்காடு) 16—3—27

பழனி சி. எம். சாமி குரு அப்ரேக் செந்தூரம் நீரிழிவுக்கு கைகண்டது புட்டி 15ரூ

" " நாகபஸ்பம் மூலத்திற்கு புட்டி 1க்கு 4. ரூ.

பிரமேக நிவாரணி வெள்ளை வெட்டை வியாதிக்கு புட்டி 1க்கு 2. ரூ.

பிளுங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத் தெரு ஜி. டி. சென்னை

சித்தன் மிஸ்ரி ஆல்வா

நீராமை இந்திரியத்தை கெட்டி செய்யும். தாது விருத்தியாகும்: ஸ்திரீ சம்போகம் சுகங்கொடுக்கும். சொற்பனஸ்கலிதம் அத்திரத்தில் கெட்டுப்பட்டாய் வீரியம் போகிறது, ஸ்திரீ சயனகண்டவுடன் வீரியம் ஸ்கலிதமாய் சம்போகத்தின்பேரில் பிரியம் இல்லாமல் போகிறது, தாதுபிபாகத்திலுள் புஷ்டித்துவம் இல்லாமல் இருக்கிறது ஆகிய அநேக விதமான மேகவியாதிகள் முதலானவைகளைப் போக்கடிக்கும்.

கிராம் டின் ஒன்றுக்கு ரூ 2—8—0.

மேல்கண்ட மருந்துகள் ஈரோடு, கோயமுத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர், கிருஷ்ணகிரி, திருப்பூர், தருமபுரி இந்த இடங்களில் கிடைக்கும்.

ஆஞ்சநேய ஜோதிஷாலயம்,
நகர்த்த பேட்டை,
பெங்களூர் சிட்டி.

முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புடன் பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; லேடி சர்ட் பொத்தான்கள் செட் 12; லேடி கல்வி[illegible] 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; [illegible]யான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய [illegible] 1; மடிப்புள்ள கத்தி 1; சோத்தியான கத்தி 1; [illegible] நூதன சாவி [illegible] 1; உயர்ந்த பென்சில்கள் 12; பென்சில் [illegible] 1; [illegible] பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்க் புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; [illegible] புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 12; அழகிய பலாக சேப்டி பின்கள் 24 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி தபால் பெட்டி 119, மதராஸ்.

படிக்கப் படிக்க ஆனந்தம்! விகடப் பேச்சின் விநோதம்!!

ஆனந்த விகடன்

மாதப் பத்திரிகையை

ஆவலுடன் எதிர்பார்க்கிறார்!

தமிழ் மாதம் பிறந்துவிட்டால் தமிழ் நாட்டிலே ஆயிரக்கணக்கானவர் "ஆனந்த விகடன்" வருகிறதென்று தபால்காரனையே எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். "ஆனந்த விகடனை" எப்பொழுது தபால்காரன் கொண்டுவந்து கொடுப்பான், எப்பொழுது அதிலுள்ள விஷயங்களைப் படித்து ஆனந்திப்போம் என்று சதா இதே சிந்தனையாய் "ஆனந்த விகடன்" சந்தாதார்கள் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது சகஜமாயிருக்கிறது. அவர்களுடைய எண்ணம் நிறைவேறுமாறு அன்றைய தினமே தபால்காரன் "ஆனந்த விகடனை" அவரிடம் கொண்டுவந்து கொடுக்கிறான். அதை அளவிலா ஆனந்தத்துடன் வாங்கி உடனே அதைப் பிரித்துப் படிக்கிறார்; சிரிக்கிறார்; தம் நண்பர்களுக்கெல்லாம் அதைப் படித்துக் காண்பிக்கிறார். அவர் முழுவதும் அன்று ஆனந்தமயமாகவே இருக்கிறது. "ஆனந்த விகடனை"ப் படித்தால் நீங்கள் ஆனந்தமாயிருப்பீர்கள். உடனே சந்தாதாரர் சேருங்கள். தாமதிக்க வேண்டாம். இவ்வளவு குறைந்த சந்தாவுக்கு இதைவிட ருசிகரமான பத்திரிகையை நீங்கள் வேறெங்கும் காணமுடியாது.

இந்தியா, பர்மா, இலங்கைக்கு வருடசந்தா தபால்கூலி உள்பட ரூ. 1—0—0.
சிங்கப்பூர், பினாங்கு, செட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு முன்பணம் ரூ. 1—4—0.
மாதிரி காபி இனாம்!

'ஆனந்த விகடன்' ஆபிஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ்

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.

பொருள் செய்வகை.

உங்கள் வியாபாரம் விருத்தியாக வேண்டுமானால் இப்புத்தகத்தை நீங்கள் அவசியம் வாசிக்கவேண்டும். இப்புத்தகத்தில் எந்தப் பக்கத்தைப் பார்த்தாலும் உங்களுக்குத் தெரியாத அநேக இரகசியங்கள் இருக்கின்றன. இந்துவருஷத்திற் கொருதடவை சில சாமான்கள் விலைபெறுகின்றன. இது உங்களுக்குத் தெரியுமா. இப்புத்தகத்தை வாசித்துப் பாருங்கள். கிராம வியாபாரம், துணிந்து செய்யும் வியாபாரம், ஒப்பந்த வியாபாரம், சாக்குகள் வில் ஏழைகள் இறங்குவதும் அறியும் விபரம் இன்னும் அநேக இரகசியங்கள் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இதன் விலை ரூபாய் ஒன்று.

தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி, புதுச்சேரி.

மதுரை, இராமநாதபுரம் ஜில்லா பார்ப்பனரல்லாத இளைஞர் மகா நாடு களிலும் இன்னும் அநேக பொருட்காட்சி சாலைகளிலும்,

அநேக டாக்டர்களிடமிருந்தும் நற்சாட்சி பத்திரம் தங்க மெடல்கள் பரிசுபெற்ற மதுரை. V. K. அன் சன்ஸ்., கம்பெனியாரின்

லன் பிளவர் சோப்,
லர்தார் சோப்,

ஹார்ட்லி அன்பர்மல்ஸ், டின் பிஸ்கட்ஸ் உபயோகப்படுத்துங்கள்.
எல்லா ஷாப்புகளிலும் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

தந்தி விலாசம், "பிஸ்கட்" மதுரை.
V. K. அன் ஸன்ஸ்., கீழமாசி வீதி, மதுரை.

இனாம்! இனாம்!!
நேயர்கள் தங்கள் விலாசம் தெரிவிப்போருக்கு அரும் பாக்கம் வைத்தியம் ஸ்வாமி ஞானானந்தரின் குடும்ப ஆயுர்வேத புத்தகம் இனாம்!!

ஞானானந்தர் ஆயுர்வேத ஹோம
408, தங்கசாலை வீதி, சென்னை.

சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.

மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஞு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

'சேலம் மாம்பழம்'

விற்பனைக்கு தயாராகிவிட்டது, விலை சரசம்
தினசரி மார்க்கட் நிலவரத்திற்கு என்னுடைய சொந்த பார்வையின்மேல் பொறுக்கி எடுத்து ஜாக்கிறதையாய் பாக் செய்தனுப்பப்படும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.

செடிகள், விதைகள் கேட்லாக் இனாம்.

ச. கோ. இ. காதர்மீரு சாயபு,
ஹெட்நர்சரி அண்டு பழவியாபாரம், சேலம்.
தந்தி விலாசம்:— "ஸ்டோர்," சேலம்.

திருப்பூர் ஸ்பெஷல் கார்டிகன் பனியன்ஸ்.

தமிழ் நாட்டு இளைஞர்களால் தயார் செய்யப்பட்டிருக்கிறது.

20 இஞ்சு முதல் 40 இஞ்சு வரை உள்ள எல்லா நிறுசுகளும் கிடைக்கும்,
விலை 32 இஞ்சு 2 நூல் புரா சைஸ் டஜன் 1 க்கு 3—8—0.
,, ஷை 3 நூல் Thick Fancy 5—0—0.

இவைகளைத் தவிர எங்களிடம் பெரிய வலை, சின்ன வலை, கோசுப்பான் வலை நிகபிக், நின்பிக், ராயல் நிச், ராயல் ரிப்டிபினென் முதலான பனியன்களும் இந்தியாவிலுள்ள எல்லா பனியன்களையும் விட விலை சலிசாகவே கிடைக்கும்.

வேண்டியவர்கள் நேரே எங்கட்கு ஆர்டர் செய்யவும். விலை விபர ஜாபிதா இனம்,

The General Knitting Factory,
Tirupur, (S. India).

சுவாச காச ரோகத்திற்கு

ஆஸ்த்மா சிகிச்சைக்கு ஆசமுகிய சுபரோக நிவாரணி என்னும்

ஆஸ்த்மா பௌடர்.

கொடிய சுவாசகாச ரோகத்திலிருந்து தப்பித்துக்கொள்ள விரும்புவோர் இதை ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள். கபத்துக்கு இது ஒரு சத்ரு. நிமிஷக் கணக்கில் தொந்திரவை நீக்குகிறது.

வைத்திய சிரோன்மணிகளால் அங்கீகரிக்கப்பட்டது. சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு, இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இரைப்பு, சிதளம், மார்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, காரப்பு, எரிச்சல், புண், வலி முதலிய சகல கஷ்டங்களையும் இந்த ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்து கெட்டியான கபத்தை இளகச் செய்து கபத்தை வெளியில் தள்ளி கஷ்டமில்லாமல் எப்பொழுதும்போல் சுலபமாய் மூச்சுவிடும்படியாயும், பசிதீபனமுண்டாக்கி அவனுடன் அதிக ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரைசெய்யும்படியாயும் செய்கிறது. தவிர, இம்மருந்து சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், நாசியில் நீர்வடிதல், விஷ ஜுரம், நிரேகம் மெலிதல், முகம் வெளுத்தல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளுக்கு மிகவும் மேலான மருந்தாயும், கிமி ஷங்களைக்கூட அதிக ஆச்சரியத்துடன் நிவர்த்திசெய்யத் தக்கதாயுமிருக்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடிய டப்பா 1-க்கு விலை ரூ 1-4-0. தபால் செலவு வேறு. ப்ரொப்ரைட்டர், ஆ. மா. சொக்கலிங்க முதலியார்,

திருநாவுக்கரசு வைத்தியசாலை,
அக்காளம்மன் கோவில் வீதி, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மிகவும் சௌகரிய காமரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோ பிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி அநேகர் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு 3½ X 2½ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது காலத்துக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 க்கு கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்ச் பீபில், ஜி. டி. மதராஸ்

டேபில் டைம்பீஸ் இனாம்!!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "லோக்டன்" கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு ஒரு அழகிய டேபில் டைம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். இரண்டின் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்,



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு கேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பாங்காங் வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்

இனாம்! இனாம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு மிக்கப் விசித்திரவேலை செய்யப்பட்ட சில்வர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த கேஸ் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேண்டியவர்கள் உடனே எழுதவும். கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town. Madras.

மலையாளம் மதனகாமேஸ்வரி லேகியம்

பொன் பெற்ற தாதுபுஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1-க்கு ரூ. 8. தபால் செலவு 8 அணா எண்பட்டு ரொட்லக் இனம்.

சித்த வைத்தியசாலை கம்பெனி K. A.
போஸ்ட் முக்கம், தென் மலையாளம்

சுயமரியாதை அடைய
பார்ப்பனீயம் ஒழிய,
'திராவிடன்' 'குடி அரசு'
பத்திரிகைகளை வாசியுங்கள்.

பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னாடிஸ மெஸ்மரிஸ மென்னும்

மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, சூளை போஸ்டு, மதராஸ்,

வியாபாரிகளே! கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினாலேயே வியாபாரம் ஓங்கி வளரும்

லாபகரமான வழியை அறிவதெப்படி?

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாப்போல் சரியான கணக்குகள் வையுங்கள்

உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

வர்த்தகக் கணித நூல்

என்று புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனே நமக்கு வரவேண்டிய தெவ்வளவு, நாம் கொடுக்க வேண்டியதெவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று சுலபமாகப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறைப்படிதான் ஷை புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் ஷை புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ 2

வாசன் புஸ்தகசாலை. நெ. 244, தங்கசாலை வீதி, தபாற்பெட்டி நெ. 119, சென்னை

ஜீவாம்ருதம்.

வைத்யரத்ன பண்டிட் டி. கோபாலாச்சார்லு அவர்களால் சிறந்த மூலிகைகளினின்றும் கண்டு பிடிக்கப்பட்டு கால் நூற்றாண்டுகளாக உலகில் நிலவி வருவது. ஆரோக்கியம், தேஜஸ், வீரியம், பலம் முதலியவைகளைத் தன்னுள்ளடக்கிய தேவாம்ருத புட்டி என்பது மிகையா! மெலிந்த தேகிகளுக்கும், நோயாளிகளுக்கும் இது உண்மையில் ஒரு வரப்பிரசாதந்தான்.

இன்றே ஒரு புட்டிக்கு ஆர்டர் செய்து பாருங்கள்.

விலை ரூ. 3—4—0

ஆயுர்வேதாஸ்ரமம்.

151 கோவிந்தப்ப நாயக்கன் தெரு, தபாற் பெட்டி 287, சென்னை.

பெண்கள்

ஆவலாய்விரும்பக் கூடியது! உயர்ந்த மஸ்லின், பச்சை, புளூ, வயலெட், ஆரஞ்சி, கருப்பு, கெம்ப ஸ்நப்கலர்கள். கெட்டிச்சாயம், கரையிலும் முந்தியிலும் பூவேலைமானமுள்ள நூதனமாகத்தயார் செய்த புடவை. 18 மு. X 48 இஞ்சு புடவை ரூ. 4—8—0. ஷை பூவேலைமானமில்லாதது ரூ. 4—4—0. ஷை உடல் சிகப்பு அல்லது கருப்பு பல மாதிரி புள்ளிகள் போட்ட சுங்கடி புடவை ரூ. 4—8—0. புதிய கேட்லாக் இனாம்!

The Madura Oriental Trading Co.
Laxmi Colth Store, MADURA.

ஆநந்த குணபோதினி.

மூன்றாம் வருடம்.

இதுபோன்ற நவீன மாதாந்தர பத்திரிகை இதுவரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் அங்கியமைந்த சஞ்சிகைகளையொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் கற்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதகமானவை. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். 5000—சந்தாதார்கள்உள்ளது வருட சந்தா ரூ. 1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனாம். ... பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குணபோதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

அறிக்கை.

எங்களிடம் பிரான்ஸி நல்ல ரகமுள்ள வெள்ளி ஜரிகை மார்க்குகளும், பாம்பே குவாலட்டி மேல் கண்ட மார்க்குகளும், சூரத் மார்க்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி தினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினால் அனுப்பித்தருவோம்.

சி. லிங்கி செட்டி,
எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,
கோயமுத்தூர்

15 இனம் சாமானுடன் கொடுக்கப்படும்



எங்களின் தாரா லீவர் 18 காரட் ரோல்ட் கோல்டு பாக்கெட் கடியாரம் ஆர்டர் செய்பவர்களுக்கு இதில் கண்ட 15 இனம் சாமான் கொடுக்கப்படும். இனங்களுடன் ரூ 4—8—0. தி. பான்ஸி வாட்சு அவுஸ், ஜி. டி. மதராஸ்.

இது ... க்கிளாகவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.